# Bank of Ceylon Pensioners' Association
## Jaffna District

**இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்**
**யாழ். மாவட்டம்**

# 11th Issue
# 11வது வெளியீடு

வெளியீடு:
**மலர்க்குழுவினர்**

| | | |
|---|---|---|
| **Title** | : | BoC ETERNAL BANKER |
| **Chief Editor** | : | K.Balasubramaniam |
| **Cover Design** | : | Editorial Committee |
| **First Edition** | : | March 2012 |
| **Published by** | : | Bank of Ceylon Pensioners' Association<br>Jaffna District, 1st floor<br>Bank of Ceylon Supra Grade Branch<br>Hospital Road, Jaffna. |
| **E-mail** | **:** | bocpensionersasso.jd@gmail.com |
| **Printers** | : | Guru Printers, 39/2, Adiyapaatham Road,<br>Thirunelvely, Jaffna. |
| **No of Pages** | : | **58** |
| **No of Copies** | : | **200** |
| **Paper Used** | : | 70 Gsm |
| **Subsidized Price** | : | Rs. 100 |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இலங்கை வங்கி வாழ்நாள் வங்கியாளர் |
| தலைமை ஆசிரியர் | : | க.பாலசுப்பிரமணியம் |
| அட்டை வடிவமைப்பு | : | மலர்க்குழு |
| முதற் பதிப்பு | : | பங்குனி 2012 |
| வெளியீடு | : | இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம், யாழ் மாவட்டம், முதலாம் மாடி<br>இலங்கை வங்கி.<br>ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| மின்னஞ்சல் | : | bocpensionersasso.jd@gmail.com |
| பதிப்பகம் | : | குரு பதிப்பகம், 39/2, ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| பக்கம் | : | 28 |
| பிரதிகள் | : | 200 |
| தாள் வகை | : | 70 Gsm |
| சலுகை விலை | : | ரூபா 100 |

## *Editorial Committee*

| | | |
|---|---|---|
| ***Chief Editor*** | **:** | ***K.Balasubramaniam (Rtd. Asst. Gen. Manager, BoC Northern Province)*** |
| ***Sub Editor*** | **:** | ***N.Sivaratnam (Rtd. Asst. Gen. Manager, BoC Northern Province)*** |
| ***Committee Members*** | **:** | ***S.Vignarajah (Rtd. Senior Manager BoC Jaffna Supra Grade Branch)*** |
| | | ***K.Ulaganathan (Rtd. Operations Manager, BoC Northern Province)*** |
| | | ***K.Pathmanesan (Rtd. Senior Manager, BoC Jaffna Super Grade II Branch, Stanley Road, Jaffna)*** |
| | | ***D.Sujithan (Rtd. Manager, BoC Jaffna Super Grade II Branch, Stanley Road, Jaffna)*** |
| | | ***S.Nadarajah (Rtd. Officer BoC Kachcheri Branch)*** |
| ***Date of Release*** | **:** | ***March 2017*** |

## மலர்க்குழு

| | | |
|---|---|---|
| தலைமை ஆசிரியர் | : | க.பாலசுப்பிரமணியம் (ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்.) |
| உதவி ஆசிரியர் | : | ந.சிவரட்ணம் (ஓய்வுநிலை உதவிப் பொதுமுகாமையாளர் இலங்கை வங்கி, வடமாகாணம்.) |
| உறுப்பினர்கள் | : | சி.விக்னராஜா (ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ். அதிமேற்தரக் கிளை) |
| | | க.உலகநாதன் (ஓய்வுநிலை செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்) |
| இலங்கை | | க.பத்மநேசன் (ஓய்வுநிலை சிரேஸ்ட முகாமையாளர், வங்கி 2ம் மேற்தரக்கிளை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.) |
| | | தே.சுஜிதன் (ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர், 2ம் மேற்தரக்கிளை) |
| | | ச.நடராஜா (ஓய்வுநிலை, இலங்கை வங்கி கச்சேரிக்கிளை, பொறுப்பதிகாரி) |
| வெளியீடு | : | பங்குனி 2017 |

# Contents - உள்ளடங்குபவை

1. ஆசிரியரின் உள்ளத்திலிருந்து....
2. உதவி ஆசிரியரின் எண்ணத்திலிருந்து ....
3. Message from Asst. General. Manager (N.P)
4. நேரத்தை முகாமை செய்தல்
5. Honesty of Bank Staff and Examination Misconduct
6. கோடீஸ்வரரான வங்கிசேவகர்
7. குத்தகை நிதி வசதி
8. காணி உரிமை என்பது என்ன?
9. சர்வதேச வியாபாரத்தில் இலத்திரனியல் வர்த்தகத்தின் முக்கியத்துவம்
10. இறக்கி ஏற்றல் வியாபாரம் Entrepot Trading
11. Person beyond reform - Harilal Gandhi
12. வாழ்க்கையின் உண்மை
13. Conscious Parenting
14 Rules are not flexible but Bankers have to be
15. தமிழ்மொழி செம்மொழி
16. The 99 Club
17. இலங்கை வைத்தியரும் அமெரிக்க சட்டத்தரணியும்



## ஆசிரியரின்
## உள்ளத்திலிருந்து .........

இந்த 11வது இதழுடன் நாம் ஏறத்தாழ ஆறு வருடங்களைக் கடந்து வந்திருக்கிறோம் என்பதைப் பெருமையுடனும் அதேவேளை சில வேதனைகளுடனும் இங்கே பதிவிட்டுக் கொள்கின்றோம்.

பெருமையைப் பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. இப்படி ஒரு பயனுள்ள சஞ்சிகையை வெளியிடுகிறோமென்ற பூரிப்பும் மகிழ்வும் தான் காரணம், ஆனால் வேதனை என்னவென்றால் யாருக்காக, யாருடைய நன்மைக்காக ஓய்வூதியர்களான நாம் நம் வங்கிச் சந்ததியினரின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இதை ஆரம்பித்தோமோ, அவர்கள் முழுமையாக இதைப் புரிந்து கொள்ளவில்லை என்பது தான். சிலவேளை சரியான ரீதியில் இதை அவர்களிடம் கொண்டு செல்ல நாம் தவறிவிட்டோமோ தெரியவில்லை.

ஆனாலும் ஒரு திருப்தி என்னவென்றால் குறிப்பிட்ட ஒரு பகுதியினரின் ஆதரவு எமக்குத் தொடர்ந்தும் இருப்பது தான்.

ஒவ்வொரு பதிப்பும் சில நூறு பிரதிகளேயானாலும் அவை முழுமையாக விற்றுத் தீர்ந்து விடுகின்றன. ஆனால் இது போதாது என்பது தான் எமது கருத்து. விற்பனையை அதிகரித்தால் இலாபம் கூடும் என்ற நோக்கம் இந்தச் சஞ்சிகைக்கு சற்றேனும் பொருந்தாது. ஏனெனில் எமக்கு ஆகும் செலவின் சரிபாதியைத் தான் நாம் இதை வாங்குபவர்களிடம் அன்பளிப்பாகப் பெறுகின்றோம்.

ஆனாலும் இதன் பெருமையை வங்கி வட்டாரத்துக்கு வெளியே உள்ள ஒருவர் பகிரங்கமாக இதை ஒரு விழாவில் நாம் சற்றும் எதிர்பாராமல் சொன்னது எம்மைத் திகைப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது.

17.4.2017 அன்று புதுவருட விழா பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் கொண்டாடப்பட்டது. அதற்கு ஓய்வூதியர்கள் வாடிக்கையாளர்கள் எனப் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர்,

இந்தச் சஞ்சிகையைக் பற்றி அங்கு ஒரு வாடிக்கையாளர் மிகவும் பெருமையாகச் சொன்னதைக் கேட்க மகிழ்வாக இருந்தது. ஏதோ ஒரு வழியில் அவருக்கு ஒரு இதழ் கிடைத்திருக்கிறது. அதை வாசித்திருந்த அவர் அன்று பகிரங்கமாக ஒரு சுருக்கமான ஆய்வுரையையே செய்து விட்டார். ஓய்வூதியர்கள் இப்படியான சேவைகளில் ஈடுபடுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய காரியம் என்று சொன்னார். நிகழ்வு முடிந்தவுடன் அங்கு ஆசியுரை ஆற்றிய மதகுருவும் இன்னும் ஓரிரண்டு பேரும் இந்தச் சஞ்சிகையின் இதழ்களைத் தாங்களும் பெறும் ஒழுங்குகளைச் செய்து தருமாறு என்னிடம் கோரிக்கை விடுத்தார்கள்.

இந்த நிகழ்வை நான் எமது ஆசிரியர் குழுவோடு பகிர்ந்து கொண்டபோது அனைவரும் மகிழ்ந்தார்கள். அதிகநேரம் உங்களுக்குக்குறுக்கே நான் நிற்காமல் நூலினுள்ளே உங்கள் பிரவேசம் நடைபெறட்டும் என வாழ்த்துகிறேன்.


நன்றி


*ஆசிரியர்,*


***க. பாலசுப்பிரமணியம்***


*முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர்*


*இலங்கை வங்கி.*





# உதவி ஆசிரியரின் எண்ணத்திலிருந்து

"வாழ்நாள் வங்கியாளர்" எனும் எமது அரையாண்டு சஞ்சிகையின் 11 வது மலர் இதுவாகும். இதை அச்சிடும் செலவிலும் மிகக் குறைந்த ஒரு சகாய விலையான ரூ 100/= க்கே இது விநியோகிக்கப்படுகிறது. இதன் பயன்பாட்டை பலரும் உணர்வதாக தெரியவில்லை. நிதி நிறுவனங்களில் வேலை செய்பவர்களும், வங்கியாளர் பரீட்சை எழுதுபவர்களும், உயர்தர மாணவர்களும் பொது மக்களும் பயன்பெறக்கூடிய ஆக்கங்கள் எம்மால் பிரசுரிக்கப்படுகிறது. எனவே இது பற்றிய ஒரு விழிப்புணர்வை வாசகர்கள் ஏனையோரிடையே ஊட்டுவதை தமது கடமையாக கொள்ள வேண்டுமென வினயமாக கேட்டுக்கொள்கிறோம்.

வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் தற்சமயம் அதிகரித்து காணப்படுவதால் பல நன்மைகளும் சில தீமைகளும் இருப்பதாக வாதப்பிரதிவாதங்கள் பலரிடையேயும் நிலவுவதால் வட மாகாண வங்கியாளர் சங்கம் "வடமாகாணத்தில் - யுத்தத்தின் பின்னர் நிதித்துறையினரின் அதிகரித்த செயற்பாடுகள் சாதகமா?, பாதகமா?, " எனும் தலைப்பில் கடந்த 15.01.2017 ல் ஒரு பட்டி மன்றத்தை நடாத்தியது. இது இறுவெட்டாக (C.D ஆக) வெளியிடப்பட்டு ரூ 100/= க்கு விநியோகிக்கப்படுகிறது. பெற்று பயன்பெற விரும்புவோர் எம்முடன் அல்லது திரு.ச.நடராஜாவுடன் Mobile-0710662070 (மலரக்குழு உறுப்பினர்) தொடர்பு கொள்ளவும்.

இலங்கை வங்கியின் பழைய ஆவணங்கள் நூல்கள்,படங்கள்,செய்திகள்,துணுக்குகள் போன்றவற்றை ஓய்வுபெற்ற மற்றும் சமகால ஊழியர்களிடமிருந்து பெற்று ஒரு அரும் பொருட்காட்சியகத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளோம். தயவுசெய்து இம் முயற்சிக்கு உங்கள் எல்லோரதும் உதவிகளையும் ஒத்துழைப்பையும் கோரி நிற்கின்றோம்.


***ந. சிவரத்தினம்***

***முன்னாள் உதவிப்பொது முகமையாளர்***

***இலங்கை வங்கி***


Your true religion is the
life you live,
not creed you profess.
- unknown

Integrity
is never
painless
- M. Seott peck



# Message from Asst. General Manager (Northern Province)

With great pleasure and pride, I give this felicitation message to the half yearly journal"Eternal Banker" published by the Jaffna District Pensioners' Association.

Pensioners have been the pioneers and pillars of this great entity, taking it to the prestigious position in the banking industry today with their valuable contribution. They have worked in a very challenging environment with much commitment and dedication when computers, technology advanced machines, air conditioning etc., were not available.

Even in this present digital era where advanced technologies such as ATM, CDM (Cash Deposit Machines) and internet banking facilities are available, the support and assistance of our pioneers is very much vital to sustain the No. 1 position of our institution. As such, the fullest support of our valuable past staff is needed much by the present staff to wave the BoC flag even higher.

It is really very much pleasing to note that the Pensioners' Association is actively involved in looking after the welfare of the Pensioners and the younger generation of BoC Family of Northern Province, with their many useful activities and releasing of magazines with good articles. I am of the view that both past and present staff of BoC will be much benefitted by this magazine.

Most heartily, I appreciate the hard work and the untiring efforts of the pensioners of Northern Province in enhancing the mutual benefits of the Pensioners and the Bank of Ceylon.

I extend my warm and sincere wishes to every one of them and wish them every success in their future endeavours too.

***M. J. Prabaharan***
***Asst. General Manager***
***(Northern Province)***
***Bank of Ceylon***



# நேரத்தை முகாமை செய்தல்

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் சமமானவர்கள். அவர்களுக்கான தேவைகள் அனைத்தும் பாகுபாடு இன்றிக் கிடைக்க வேண்டும் என்ற மனிதாயவாத அல்லது இடதுசாரிச் சிந்தனை பலவேளைகளில் தோல்வி போகும் விடயமாகவே இருக்கிறது. வளர்முக நாடுகளில் குழந்தைகள் பலர் உணவு இன்றி இறந்து கொண்டிருக்கும் போது அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பலர் மீ ஊட்டத்தினால் நிறை அதிகரித்துச் சிக்கல்படுவது அனைவரும் அறிந்த இரகசியம். ஆயினும், மனிதர்களுக்குக் கட்டாயமாகச் சம அளவில் வழங்கப்படும் ஒரு வளம் இருக்கிறது. அதுதான் நேரம். ஒரு நாளில் இருபத்து நான்கு மணிநேரம் என்பது எந்தப் பாகுபாடும் இன்றி வழங்கப்படுகிறது.

சிலர் அதை வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றனர். வேறு பலர் விரயம் செய்து தோல்வி காண்கின்றனர். வாழ்வின் வெற்றி என்பது ஒரு எண்ணிக்கையில் தங்கியுள்ளது. எத்தனை மனிதர் நாம் வாழ்ந்ததால் நிம்மதியாக மூச்சுவிட்டனர் என்பதே அந்த எண்ணிக்கை. இந்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துவது முக்கியமாகிறது.

"நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கழித்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தாமும் கெட்டார்."

என்ற பழைய சினிமாப் பாடல் அர்த்தம் பொதிந்தது. ஆம், நேரத்தில் ஒரு கணமும் எமக்காகத் தரித்து நிற்காது.

நேரத்தை உச்சமாகப் பயன்படுத்துவது ஒரு திறன். இரவு பத்து மணிக்கு மேல் படிப்பதில் 50%மும் பதினொரு மணிக்குமேல் படிப்பதில் 27% மும் பன்னிரெண்டு மணிக்கு மேல் படிப்பதில் 09% மும் மட்டுமே அடுத்தநாள் நினைவில் நிற்கிறது என்று ஒரு ஆய்வு கூறுகிறது. ஆகவே, நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தும் ஆற்றல் கொண்ட மாணவர்கள் இரவு பத்து மணிக்குப் படுத்துவிடுகிறார்கள்.

எமக்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றிச் சிந்திக்கவும் மற்றவர்களை எப்படி புண்படுத்தலாம் என்று யோசிக்கவும் வேறு மனிதர்களைத் தண்டிக்கவும் பழிவாங்கவும் அவற்றுக்கான திட்டங்களைத் தீட்டவும் நாம் எவ்வளவு நேரத்தைச் செலவு செய்கிறோம்?

நேரத்தைச் செம்மையாகச் செலவிட விரும்புகிறவர்கள் சில ஒழுங்கு முறைகளைப் பின்பற்றலாம். முதல்நாள் முடிவிலேயே அடுத்த நாளுக்குரிய செயற்பாட்டு ஒழுங்கைத் தயார் செய்துவிட்டுப் படுக்கைக்குச் செல்லலாம். செய்ய வேண்டிய பல வேலைகள் இருந்தால் முக்கியமானதும் அவசரமானதுமான விடயங்களை முன்னுரிமை ஒழுங்கில் முதலில் வைத்துக்கொள்ளலாம். முக்கியமான அவசரமற்ற விடயங்கள் அடுத்து வரலாம். முக்கியமற்றதும் அவசரமற்றதுமான விடயங்கள் கடைசியிலும் வரலாம்.

ஒருநாள் வேலையில் ஒரு பொது ஒழுங்கு இருப்பது நல்லது. அவசியமானபோது இந்த ஒழுங்கு மாறலாம். அதிகாலை 5.00மணிக்குத் துயில் எழுந்துவிடலாம். வேலைக்குச் செல்பவர்களாக இருந்தால் உரிய நேரத்திற்குச் சென்று தினசரிக் கருமங்களை முடிந்தவரை

அன்றே முடித்துவிட்டு வீடு திரும்ப வேண்டும். வேலைகளைச் சேரவிடுவது அநாவசியமான பதற்றத்தை ஏற்படுத்தும்.

ஒரே நேரத்தில் இரண்டு தொலைபேசிகளில் உரையாடிக் கொண்டு முன்னால் ஒருவரை அமர்த்தி வைத்துக்கொண்டு கோவைகளில் கையெழுத்துப்போட்டுக் கொண்டிருக்கிற சில உயர் அதிகாரிகளை நாம் பார்த்திருப்போம். ஆயினும், அது புத்திசாலித்தனமான முறை இல்லை. குறித்த ஒரு நேரத்தில் ஒரு செயற்பாட்டில் மட்டும் ஈடுபடுவதே வினைத்திறனை அதிகரிக்கும் முறை. முக்கியமான சில கருமங்களை யாரும் இல்லாத தனியிடத்தில் இருந்து செய்கிற போது வேகமாகச் செய்ய முடியும்.

எங்கள் பலருடைய பெருமளவு நேரம் விரயமாவது கதைப்பதிலாகும். விரைவாகவும் நாகரிகமாகவும் உரையாடப் பழகிக்கொள்வது ஒரு கலை. எங்கள் நேரம் வரையறுக்கப்பட்டது என்பதை உறுதியாக மற்றவருக்கு வெளிப்படுத்தத் தெரிவது நல்லது. தேவையற்ற பிரயாணங்களில் அதிக நேரத்தைச் செலவிடுவதையும் குறைத்துக் கொள்ளலாம்.

வேலை செய்யுமிடத்தில் ஞாபகப்படுத்த வேண்டிய விடயங்களை எழுதிச் சட்டைப்பையிலோ கைப்பையிலோ எடுத்துச் சென்று மேசையில் காட்சிப்பொருளாக வைத்துக்கொள்ளலாம். வீட்டிலும் சரி, வேலைசெய்யும் இடத்திலும் சரி பொருள்களைத் தேடித் திரிவதில் கால விரயத்தைத் தவிர்ப்பதற்காக அந்தந்தப் பொருள்களைக் குறித்த இடங்களில் சுலபமாக எடுக்கக்கூடிய முறையில் பேணி வைக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

நேர முகாமை தொடர்பான கருத்துக்களைக் கூட இருந்து வேலை செய்பவர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்துவதோடு கடமைகள் பொறுப்புக்களையும் உரிய முறையில் பகிர்ந்து கொடுத்து விடலாம்.

கூட்டங்கள், கலந்துரையாடல்கள் உரிய நேரத்தில் தொடங்கி உரிய நேரத்தில் நிறைவுபெறும் வகையில் வினைத்திறனுடன் அமைத்துக் கொள்வது சிறந்தது. கூட்டங்களில் நடைபெறும் தேவையற்ற விவாதங்களும் சண்டைகளும் எதையுமே கொண்டுவந்து சேர்ப்பதில்லை என்பது பலரும் அறிந்ததே. வினைத்திறனுடன் செய்ய முடியாத அல்லது நேரத்துக்குள் அடக்கிக் கொள்ள முடியாத விடயங்களை 'இயலாது' என்று மறுத்து விடுதலும் ஒரு கலையே. யாரையும் புண்படுத்தாமல் உறுதியுடன் மறுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

எந்த ஒரு விடயத்தைச் செய்யும் போதும் அதற்கு ஒரு முன்னாயத்தம் இருக்க வேண்டும். முன்னாயத்தம் நேரத்தை மீதப்படுத்த உதவும். தேவையான போது அந்த முன்னாயத்தத்தில் மாற்றம் செய்து வளைந்து கொடுக்கலாம்.

சுற்றிவர என்ன குழப்பம் நடந்து கொண்டிருந்தாலும் அக அமைதியுடன் செயற்படக் கூடிய ஒரு நிலையைப் பயின்று கொள்ளுதல் மிகவும் பயன்தரும்.

சிலர் எப்போதும் ஓடிஓடி ஏதாவது செய்து கொண்டே இருப்பர். என்ன செய்கிறார்கள் என்று பார்த்தால் பெரிதாக ஒன்றும் இருக்காது. கவனியுங்கள். சுறுசுறுப்பாக இயங்குவது என்பதும் வாழ்வில் நிறையச் சாதிப்பது என்பதும் ஒன்றில்லை. நிறையச் சாதிப்பவர்கள் அநேகமாக அமைதியாகச் செய்து கொண்டிருப்பார்கள்.

என்னதான் நேர முகாமைத்துவம், நேரத்தை வினைத்திறனுடன் செலவு செய்தல் என்று பேசிக் கொண்டாலும் ஓய்வின் அவசியத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. எமது அவசியத் தேவைகளில் நித்திரையும் ஒன்று. இரவில் 6 -8 மணி நேர நித்திரையை எதற்காகவும் தியாகம் செய்யக் கூடாது. இரவில் அமைதியாகத் தூங்குவது பகலில் உற்சாகமாக இயங்க உதவும். பகலில் ஓய்வு தேவையாயின் ஒரே முறையில் நீண்ட ஓய்வு எடுப்பதை விட எமது இதயம் போல இடையிடை சிறு சிறு ஓய்வு எடுப்பது சிறந்தது. எமது இதயம் தனது ஒவ்வொரு அடிப்பிலும் ஒரு சிறு ஓய்வு எடுத்துக் கொள்ளும். லப் - டப் ..... லப் - டப்.... என்று வரும் போது நீளமான இடைவெளி வரும் நேரம் ஓய்வு நேரமாகும். அப்படி ஓய்வு எடுப்பதால் தான் அது இறப்பு வரை வினைத்திறனுடன் தொழிற்படும் உறுப்பாக இருக்கிறது.

ஈ.வே.ரா. பெரியார் நெடுங்காலம் தொடங்கித் தமது இறுதி நாள் வரை தாடியுடன் வாழ்ந்தார். அவரது அரசியல் எதிரிகள் அவரைக் ‘கஞ்சன்” என்று கிண்டல் செய்ததுண்டு. ஒரு சமயம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் பெரியாரிடம் தாடியின் காரணம் பற்றி விசாரித்த போது கிடைத்த பதில், “தினசரி சவரம் செய்து கொள்வதற்குச் சுமார் 10 நிமிடங்கள் செலவாகும். மாதம் 300 நிமிடம். அதாவது 5 மணி நேரம். அந்த நேரத்தை மக்கள் நலனுக்குச் செலவழிக்கலாம்” நாமும் சிந்திக்கலாமா?

பெஞ்சமின் பிராங்க்ளினின் விற்பனை நிலையத்துக்கு ஒரு பிரமுகர் வந்தார். ஒரு நூலை எடுத்து “பையா இதன் விலை என்ன?” என்று கேட்டார். “ஒரு டொலரா? ஏன் அவ்வளவு விலை? கூப்பிடு முதலாளியை” என்றார். பிராங்க்ளின் வந்தார். “மிஸ்டர் பிராங்க்ளின் இந்தச் சிறிய புத்தகம் ஒரு டொலராமே?” “இல்லை அதன் விலை ஒன்றரை டொலர்” என்று சிரித்தார் பிராங்க்ளின். “என்ன இது? பையன் ஒரு டொலர் என்றான். அதுவே அதிகம். நீங்கள் ஒன்றரை டொலர் என்றால்? சினந்தார் சீமான். “இப்போது அதன் விலை 2 டொலர்.” கனவானுக்கு கோபம் எல்லை மீறி விட்டது. “என்ன விளையாடுகிறீர்? அக்கிரமத்துக்கு அளவில்லையா?” “ஆரம்பத்தில் அதன் விலை ஒரு டொலராக இருந்தது உண்மை தான். ஆனால், இப்போது அதன் விலை இரண்டு டொலர். ஏன் தெரியுமா? எனது நேரம் பொன்னானது.....” வந்தவர் மறுபேச்சின்றி இரண்டு டொலர் கொடுத்து நூலை வாங்கிச் சென்றார்.

உலகில் புகழ்பெற்ற மனிதர்கள் பலரும் நேரத்தை எவ்வளவு உயர்வாகப் போற்றியிருக்கிறார்கள் என்பதை இச்சம்பவங்கள் காட்டுகின்றன.

ஆயுள் குறுகியது. நாளையும் மரணம் சம்பவிக்கலாம். ஆகவே நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தி நல்ல பணிகளைச் செய்வோம்.

***

*கலாபூஷணம் (திருமதி)* ***கோகிலா மகேந்திரன்***
*முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்,*
*நிபுணத்துவ ஆலோசகர்,*
*உள சமூகவள நிலையம்.*
*வடக்குமாகாணக் கல்வி அமைச்சு.*

# Honesty of Bank Staff and Examination Misconduct

Honesty in public examinations is a MUST. This well known Sri Lankan Professor and writer refers to two judicial decisions to buttress his stand.

For sometime, because of my other engagements, I had not been able to contribute to the Bankers Journal. By comparative standards, I consider it a good and useful journal and would encourage others also to contribute to it.

In March 2004 issue of the Journal, I saw a brief account about Examination Misconduct and Penalties. The Bankers Institute has decided that candidates found guilty of examination misconduct will be subject to several penalties such as disqualification from those subjects, prohibition of entry to future examination, suspension and even expulsion from membership of the Bankers Institute.

As an Academic and a Lecturer and Examiner in Universities and Higher Educational Institutions for several years, I welcome and applaud these decisions of the Institute's Governing Board to eradicating examinations misconduct. In plain terms Examination misconduct is dishonesty or cheating. The candidate who misconducts is (i) cheating himself (ii) cheating the other candidates, (iii) cheating the Bankers Institute and (iv) cheating the Bank or Financial Institution that employs him.

In this context, I like to highlight a reported judicial decision of the Sri Lankan Courts which specially relates to a case of cheating (misconduct) by a candidate at the Banker's Institute examination in the early 1980s.

The candidate who got caught cheating at the Institute's examination was an employee of the National Savings Bank. Although his name is given in the law report I am not mentioning his name because his misconduct occurred over twenty years ago. This judicial decision is reported in our law reports under the name National Savings Bank v. The Ceylon Bank Employees Union (1983) 2 Sri Lanka Law Reports page 629.

In that case the candidate's offence was that at the examination he had in his possession study notes relevant to the examination paper he was answering. The examination invigilators had found the notes in his possession. When questioned the candidate had said that he had been referring to the notes when traveling to the place

of examination and had at the last minute put the notes into his trouser pocket and forget that he had done so when he entered the examination hall. His story was not believed.

As a punishment, The Banker's Institute debarred him for life from sitting for any examinations conducted by it. The Institute also informed his employer. The National Savings Bank. The National Savings Bank then asked the employee for an explanation. He admitted the offence of having in his possession notes relevant to the examination paper he was answering but he prayed for leniency. The Bank however felt it was a serious offence and dismissed him from employment.

The Ceylon Bank Employees Union then intervened on behalf of the dismissed employee and filed an application in the Labour Tribunal claiming wrongful dismissal, back wages and reinstatement. The Labour Tribunal President denied back wages but ordered reinstatement. The National Savings Bank appealed to the Supreme Court against this order. For the employee it was argued, that he had taken his notes into the examination hall inadvertently and the same explanation that he gave to the institute was placed before the Supreme court. According to the Supreme Court even if his story was to be believed "it showed such careless disregard for the requirements of honesty at an examination as to amount to misconduct..."

In disregarding and rejecting the view taken by the Labor Tribunal, the Supreme Court noted that the Labor Tribunal President had held that the employee had no doubt been guilty of misconduct at the examination but not of misconduct at his work place and therefore his dismissal from employment was not justified.

The Supreme Court could not agree with this view. The Supreme Court judge Mr. Justice Soza said that the Labor Tribunal President had failed to appreciate that the dishonest candidate was an employee of a Bank and Banks are under a special duty to ensure that the honesty of their employees is not open to question. Bank employees' integrity must not come under a cloud. Accordingly, the Supreme Court held in favour of the National Savings Bank and took the view that the Bank had been justified in dismissing the employee for cheating at the examination.

The Supreme Court was also referred to the Indian case of Bakshi R.Agnesh v Bharat Bank Ltd.

Gazzette of India, January 20 1951 p. 72. In that case it was held that a bank clerk who cheats at an examination held by the Indian Institute of Bankers commits misconduct in his employment. This is because there is at least a false implied representation that the examination rules have been complied with and the results of the examination will be used by the bank in considering the employment for promotion.

Accordingly, the above Supreme Court decision in National Savings Bank v. The Ceylon Bank Employees Union is cited for the following legal principle.
i) It is not open to question that Banks are under a special duty to ensure the honesty of their employees. Accordingly, the misconduct of an employee of a Bank at a public examination would justify his dismissal by the Bank.

II) The public have a right to expect a high standard of honesty in persons employed in a bank and banks have a right to insist that their employees should observe a high standard of honesty.

***Courtesy : Bankers Journal***
***Institute of Bankers Sri Lanka.***

## The Art of war for Executives by Donald G. Krause

1. Learn to Light (Gather Knowledge)
2. Do it Right
3. Expect the Worst
4. Burn the Bridge
5. Pull together (Team Work)
6. Show the Way (Guidance)
7. Know the facts (Training & Development)
8. Seize the Day
9. Do it Better (Enhances Performance)
10. Keep them Guessing

***Forwarded By : S. Muthu Gunaratnam***
***Rtd. BoC Manager***

# கோடீஸ்வரரான வங்கி சேவகர்

மனிதர்களுக்கு இயற்கையாக கிடைத்துவிடுகின்ற மேதைத் தன்மையானது உலகத்தின் உயர்வுக்கும் உலகமக்களின் மேன்மைக்குமே பயன்பட வேண்டும். ஆனால் சிலர் தமக்கு இயற்கையின் வரப்பிரசாதமாகக் கிடைக்கும் மேதா விலாசத்தை தம்மை மட்டும் வளர்த்துக் கொள்வதற்கும் உலகையும் உலக நிறுவனங்களையும் ஏமாற்றி பேரும் புகழும் மட்டுமல்ல பெரும் அளவில் பணத்தையும் சம்பாதித்து விடுகிறார்கள்.

திடீர் பணக்காரர் ஆவதற்கு எத்தனையோ விதமான உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளுக்கு சாதாரண மக்களும் அரச நிறுவனங்களும் பெரும்பாலும் இலக்காகின்றார்கள்.

சிலருக்கும் புதையல் கிடைத்து அதன் மூலம் பணக்காரராகிறார்கள். சிலருக்கு வைரக்கற்கள் கிடைத்து பணக்காரர் ஆகிறார்கள். இன்னும் சிலருக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பெருந்தொகை பணம் கிடைக்கப் பெறுகிறது. பெரும்பாலானவர்கள் திருட்டுத் தொழில் புரிந்தும் கொள்ளையடித்தும் பணக்காரர் ஆகிறார்கள்.

இன்னும் சிலர் தமது அறிவையும் புத்திசாதுரியத்தையும் வைத்து எவரும் கண்டு பிடிக்க முடியாத படி திருட்டு செய்கிறார்கள். அதன் மூலம் பெரும் பணக்காரர்கள் ஆகின்றார்கள். அரசியல்வாதிகள் அதுவும் அரசு சார்ந்த அரசியல் வாதிகளும் அவர்களின் வால்பிடிகளும் திடீர் பணக்காரர் ஆகிவிடுவதை பார்க்கிறோம். இந்த நிலைமை இலங்கையில் மட்டுமல்ல இந்தியா போன்ற நாடுகளிலும் சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றது.

இப்படியானவர்களை எழுத்தாளர்கள் தமது கதைகளில், கட்டுரைகளில் கவிதைகளிலும் கூட கண்டிருக்கிறார்கள். பூடகமாக கிண்டல் செய்கிறார்கள். அதைவிட நாடகங்கள், திரைப்படங்களில் கூட இவர்களைப் பற்றிய அம்சங்களை தத்ரூபமாக எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் அவை பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களின் ஊழல் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே போகின்றன.

மனிதர்களுக்கு இயற்கையாக கிடைத்து விடுகின்ற மேதைத் தன்மையானது உலகத்தின் உயர்வுக்கும் உலக மக்களின் மேன்மைக்குமே பயன்பட வேண்டும். அவ்வாறு பயன்பட்டமையால்தான் இன்று உலகம் இன்றைய நாகரிக தன்மையைப் பெற்றது. ஆனால் சிலர் தமக்கு இயற்கையின் வரப்பிரசாதமாகக் கிடைக்கும் மேதா விலாசத்தை தம்மை மட்டும் வளர்த்துக் கொள்வதற்கும் உலகையும் உலக நிறுவனங்களையும் ஏமாற்றி பேரும் புகழும் மட்டுமல்ல பெரும் அளவில் பணத்தையும் சம்பாதித்து விடுகின்றார்கள். அப்படியான ஒருவர் பற்றி ஆ.எஸ்.பெனிவால் எழுதியுள்ள ஒரு நூலில் விவரிக்கிறார்.

1985ஆம் ஆண்டு பெப்ரவரியில் இந்திய அரச வங்கியின் சார்பார்க் கிளை தனது கணக்குகளை மீளாய்வு செய்தபோது மூன்றுகோடி ரூபாய்க்கு கணக்கில் வித்தியாசம் இருப்பதை கண்டுபிடித்தது. அதைவிட குறித்த வங்கியினால் வழங்கப்பட்டுள்ள வங்கி ஆணை (Draft) களின் விவரங்களையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

வங்கி நிர்வாகம் இதனை துலாம்பரமாக துருவி ஆராய்ந்து கண்டுபிடிக்கும் பொறுப்பை மத்திய புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைத்தது. 20 நாள்களின் பின்னர் மத்திய புலனாய்வுப் பிரிவினர் இதில் வங்கியில உள்ள ஒருவரே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதைக் கண்டுபிடித்தது. ஆனால் குற்றவாளி யாராய் இருப்பார் என்பதற்கு அதனால் தடயம் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதன் பேரில் வங்கியிலுள்ள ஒவ்வொரு நபரினதும் தனிப்பட்ட வாழ்க்கையையும் புலனாய்வாளர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

அவர்களில் எவராவது தனது வருமானத்துக்கு மேலாகவும் சொத்துக்களை சேர்த்திருக்கிறாரா என்பதை அவர்கள் ஆராய்ந்தார்கள்.

இறுதியில் அந்த வங்கியில் பணி புரிந்த சேவகர் ஒருவரே குற்றவாளி என்ற முடிவுக்கு வந்தார்கள்.

ரகுநாத்கவுர் என்பது அவருடைய பெயர். இவர் தமது இந்த குற்றச் செயல்களைப் புரிவதற்கு தமது மனைவி மற்றும் மைத்துனரையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார். வங்கிக் கிளையிலிருந்து வங்கியின் தலைமையகத்துக்குத் தபால்களைக் கொண்டு செல்வது அவரது அன்றாடக் கடமையாக இருந்துள்ளது.

இவ்வாறு பணி புரிந்ததில் காசோலைகளை எவ்வாறு பணமாக மாற்றிக் கொள்வது என்பதில் அவருக்கு தேர்ச்சியான அறிவு கிடைத்தது.

முதலாவதாக அவர் இந்திய அரச வங்கியின் பல கிளைகளில் புனைப் பெயர்களில் கணக்குகளை ஆரம்பித்தார். அதற்கேற்ப காசோலை வசதியையும் பெற்றுக்கொண்டார்.

அவுத் கூட்டுறவு வங்கியின் அமினா பாத் கிளையில் இரண்டு கணக்குகளை ஆரம்பித்தார். கணக்குகளை ஆரம்பிக்கும் போது தன்னை அறிமுகப்படுத்துவதற்கான ஆள்களைக் கண்டு பிடிப்பதில் அவருக்கு கஷ்டம் இருக்கவில்லை.

இந்திய அரசு வங்கியின் செறக் வங்கிலிருந்து ஆர்.எம்.குப்தா என்பவருக்கு ரகுணாத் 200 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையொன்றை எழுதினார். பின்னர் அந்த காசோலையை அவுத் கூட்டுறவு வங்கியின் அமினாபாத் கிளையில் ஆர்.எம்.குப்தாவின் கணக்கில் வைப்புச் செய்தார். அது அரச வங்கியின் பிரதான வங்கிக்கு வைப்புச் செய்வதற்கான காசோலையை அனுப்பியது.

அங்கே சென்ற போது அதன் தொகை அவுத் கூட்டுறவு வங்கியில் வரவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் பணம் செலுத்தப்படுவற்காக காசோலை இநதிய அரச வங்கியின் செறக் கிளைக்கு அனுப்பப்பட்டது. அங்கே ரகுநாத்தே அந்த காசோலையை எடுத்து எறிந்துவிட்டார். காசோலை வங்கிக்குச் சென்றடையாததால் அந்த குறிப்பிட்ட தொகை பணம் காசோலையை எழுதியவரின் கணக்கில் இருக்கிறதா என்பதை நிர்ணயிப்பது சாத்தியப்படவில்லை.

அடுத்த நாள் அனுமதி வழங்கும் மையம் கிரடிட் எட்வைஸ் சிட்டையை அவுத் கூட்டுறவு வங்கிக்கு வழங்கியது. அவர்கள் ஆர்.எம்.குப்தாவின் கணக்கில் அதனை வரவு செய்தார்கள்.

ரகுநாத் உடனடியாகவே அதனை எடுத்துக் கொண்டார். இவ்வாறு முதல் தடவை கிடைத்த வெற்றியினால் ஊக்கம் பெற்ற அவர் தொடர்ந்து இந்த ஊழல் நடவடிக்கையில் வேகத்துடன் ஈடுபடலானார். இந்திய அரச வங்கியின் பெயரில் வழங்கப்படும் பணத்துக்கு சமமாக டிராப்களை எடுப்பதில் அவர் கவனமாய் இருந்துள்ளார். அதனால் கணக்குகள் சரி பார்க்கப்படும் சமயங்களில் வரவும் - செலவும் வித்தியாசம் எதுவும் இன்றியே காணப்பட்டது.

1983 ஒக்ரோபரிலிருந்து ரகுநாத் அவ்வாறான 27 காசோலைகளைத் தனது இரண்டு கணக்குகளில் வைப்பீடு செய்துள்ளார். அந்த வகையில் அந்த வங்கிக்கு 3,182,720 ரூபாய் நட்ட மேற்படுத்தியுள்ளனர். இதே மாதிரியில் பஞ்சாப் தேசிய வங்கி அலகாபாத் வங்கி மற்று ஐக்கிய வர்த்தக வங்கிகளை ஏமாற்றியுள்ளார். 1985ஆம் ஆண்டு கணக்குகள் சரிபார்த்த போது தான் இவ்வளவு பெரிய தொகைக்கான ஊழல் வெளிப்படலாயிற்று.

ரகுநாத்திடம் மிக சொகுசு பஸ் ஒன்றையும் பியாக்கோ ஸ்கூட்டர் ஒன்றையும் அதிகாரிகள் கண்டு பிடித்தார்கள். அரை கிலோ தங்கம் நகைகள், தொலைக்காட்சி பெட்டிகள், குளிர்சாதனங்கள் இரண்டு பங்களாக்கள் மற்றும் ஒரு பண்ணையும் அவர் பெயரில் இருந்துள்ளது. 20 லட்சம் ரூபா பணமும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அவர் வங்கிகளில் வைத்திருந்த கணக்குகள் எல்லாம் உடனடியாக சீல் வைக்கப்பட்டன. ரகுநாத் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்.

குற்றச் செயலானது ஒரு போதும் நன்மைதராது என்ற பாடத்தை அவர் கற்றுக் கொண்டாரா என்பது தெரியவில்லை.

நன்றி

***உதயன் பத்திரிகை***

Do you feel threatened when a friend or coworker succeeds? Rember this there's enough success for everyone

Take care of your character
and your reputation will take care of itself.

Taking initiative does not mean being pushy, obnoxious, or aggressive. It does mean recognizing your responsibility to make things happen

\- Stephen R. Covey

# குத்தகை நிதி வசதி

இன்று குத்தகை நிதி வசதி என்பது ஓர் சிறந்த ஆக்கபூர்வமான நிதியியல் முறைமையாக உள்ளது. உலகின் உபகரணத் தேவைகள் இக்குத்தகை முறை மூலம் நிவர்த்தி செய்யப் படுகின்றன. அத்துடன் குத்தகை இவ்வம்சங்களால் ஓர் கைத்தொழிலை உருவாக்கியுள்ளது. குத்தகையானது வரிச்சட்டங்கள் கணக்கியல், நிதியியல் கொள்கைகள் எனும் பல அம்சங்களைக் கொண்ட நிதி முறைமையாகும்.

கிட்டத்தட்ட கி.மு 2000ம் ஆண்டளவில் விவசாய உபகரணங்கள், நிலம், தண்ணீருக்கான உரிமை, விலங்குகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு குத்தகை முறை ஒப்பந்தங்கள் பின்பற்றப்பட்டதாகக் களிமண் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன் கி.மு 1700ம் ஆண்டளவில் பபிலோனிய அரசனான அபிராமியால் குத்தகை போன்ற ஏனைய நிதிக்கருவிகள் சமபந்தமான சட்டங்கள் உருவாக்கப்பட்டன என அச் சட்டமுறைமைகள் கூறுகின்றன.

எமது நாட்டில் குத்தகை நிதிவசதி 1981ம் ஆண்டு முற்பகுதியில் வாடகை கொள்வனவுக்கு மாற்றான கடன் வசதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் துரித வளர்ச்சி கண்டு வங்கி நிதித்துறையில் ஒரு கணிசமான துறையாகத் தற்பொழுது பரிணமித்துள்ளது. குத்தகை நிதித்துறையில் பங்குபற்றும் நிறுவனங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- விசேட குத்தகை நிதிக்கம்பனிகள் - மேர்க்கண்டையில் லீசிங், பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டட்
- நிதிக்கம்பனிகள்
- வர்த்தக வங்கிகள் - இலங்கை வங்கி , மக்கள் வங்கி<br>கொமர்சியல் வங்கி
- வணிக வங்கிகள் - Merchant Banks
- அபிவிருத்தி வங்கிகள்.

வர்த்தக வங்கிகள் குத்தகை நிதித்துறையில் புகுந்த காரணத்தால் சந்தை மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததாக மாறியுள்ளது. அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளும் இத்துறையில் தமது கிளை வலையமைப்பினூடாக தீவிர பங்கு கொண்டு குத்தகை வழங்குவதற்கென உபநிதி நிறுவனங்களை நிறுவியுள்ளன. உதாரணம் - மக்கள் வங்கி, பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி.

இலங்கையில் குத்தகை நிதி வசதிக்கான கேள்வி வருடாவருடம் அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது. விவசாய உற்பத்தி, போக்குவரத்து, கைத்தொழில் போன்றவற்றின் அபிவிருத்தியால் உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான உபகரணங்களே குத்தகை முறைக்கு பொருத்தமானவை எனக்கருத்தப்படுகின்றன. குத்தகை நிதி வசதியில் பெரும்பகுதி வர்த்தக வாகனங்களிற்கும் பிரயாண சம்பந்தமான வாகனங்களுக்கும் வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட பகுதி பாரிய இயந்திர சாதனங்கள், காரியாலய தளபாடங்கள் ஆகியவற்றிற்கும் வழங்கப்படுகின்றன.

ஒரு குத்தகையின் சிறந்த அம்சங்களை விளங்கிக்கொள்வதற்கு ஒரு சொத்தை விலைக்கு வாங்குவதற்கும் குத்தகை மூலம் பெற்றுக்கொள்வதற்கும் உரிய விடயங்களை ஒப்பீடு செய்வதன் மூலம் நாம் நன்கு விளங்கிக் கொள்ளமுடியும். பொருளொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ஒரு தொகைப்பணம் செலுத்தவேண்டும். அல்லது தவணை அடிப்படையில் பணம் செலுத்தும் ஒழுங்குடன் கொள்வனவு செய்தல் வேண்டும். கொள்வனவு செய்யப்பட்ட சொத்தும் அதன் பரிப்பும் ஐந்தொகையில் காட்டப்படும் குத்தகை அடிப்படையில் ஒரு பொருளைப் பெற்றுக் கொள்ளும்போது ஐந்தொகையைப் பாதிக்காது. பொருளின் சேவையை பெற்றுக்கொள்ள முடியும்.

குத்தகை என்பது உடன்பட்டுள்ள காலப்பகுதியொன்றிற்கு வாடகைக்கு மாற்றாக ஒரு சொத்தைப் பாவிக்கும் உரிமையைக் குத்தகைக்கு கொடுப்பவன் குத்தகை எடுப்பவனுக்கு வழங்கும் ஒரு உடன்படிக்கையாகும். அதாவது குத்தகைக் கடன் வசதி என்பது குத்தகை கொடுப்போனுக்கும் குத்தகை எடுப்போனுக்கும் இடையேயுள்ள ஒரு ஒப்பந்தமாகும். குத்தகை கொடுப்போன் சொத்தின் உரிமையைக் கொண்டிருக்கும் அதேவேளையில் குத்தகை பெறுவோன் சொத்தை வைத்துப்பாவிக்கும் உரிமையைக் கொண்டிருப்பான்.

குத்தகை எடுப்பவன் குத்தகை செயல்படும் காலப்பகுதியில் குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகை கொடுப்பவனுக்கு வழங்க வேண்டும். குத்தகை கொடுத்தவனுக்கும் குத்தகை எடுத்தவனுக்கும் இடையிலுள்ள நடவடிக்கை இருசாராருக்கும் பொதுவான ஒரு குத்தகை உடன்படிக்கையின் அடிப்படையில் அமையும்.

ஒரு குத்தகைக்கு விடப்படும் சொத்தின் சொத்தாண்மையில் வரும் இடர்களும் பயன்களும் எந்த அளவுக்கு குத்தகைக்கு கொடுத்தவரிடமோ அல்லது குத்தகைக்கு எடுத்தவரிடமோ தங்குகின்றது என்பதை அடிப்படையாகக் கொண்டு குத்தகையை நிதிக்குத்தகை, தொழிற்படு குத்தகை என வகைப்படுத்தப்படும்.

நிதிக்குத்தகை என்பது ஒரு சொத்தின் சொத்தாண்மைக்குரிய சகல இடர்களையும் பயன்களையும் போதியளவு கைமாற்றும் ஒரு குத்தகையாகும். இறுதியில் உரிமை கைமாற்றப்படலாம் அல்லது கைமாற்றப்படாது போகலாம். நிதிக்குத்தகையானது குத்தகை எடுப்போனின் விருப்பத்திற்கிணங்க விலக்குச் செய்ய முடியாததாகும் குத்தகையின் காலம் சொத்தின் பயனுள்ள ஆயுட்காலத்தின் பெரும்பகுதிக்கானதாகும். நிதிக்குத்தகை சாதாரணமாக விலக்க முடியாததாகவும் குத்தகை கொடுப்போனுக்கு அவனுடைய மூலதன முதலீட்டையும் முதலீடு செய்யப்பட்ட நிதிக்கான வருவாயையும் மீளப்பெற உறுதிசெய்யும்.

தொழிற்படு குத்தகை என்பது நிதிக்குத்தகை அல்லாத ஒரு குத்தகை ஆகும். ஒரு குறுகிய காலத்தில் ஒரு நிறுவனம் சொத்தைப் பாவிப்பதைக் குறிக்கும். தொழிற்படு குத்தகை பொதுவாகக் குத்தகைச் சொத்தின் ஆயுட் காலத்திலும் குறைவான காலப்பகுதிக்கே குத்தகை உடன்பாடு செய்யப்படும். சொத்தாண்மைக் காலத்தின் இறுதியில் விடப்பட்ட குத்தகைச் சொத்து குத்தகை கொடுத்தவருக்கு மாற்றப்படும். குத்தகை கொடுத்தவன் சொத்தை திரும்பவும் குத்தகைக்கு விடலாம் அல்லது வேறு எவருக்காவது விற்கலாம்.

**குத்தகை நிதி வசதியால் ஏற்படும் நன்மைகள்**

- குத்தகை மூலம் தேவை ஏற்படும் பட்சத்தில் 100%மான நிதி வழங்கப்படும். மேலும் விரைவாகவும் சாதகமாகவும் குத்தகை வசதியைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
- தொழிற்படு மூலதனத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படாது. அதி உச்ச வரிச்சலுகைகளைப் பெற்றக் கொள்ள முடியும்.
- தேய்மான விடுதொகை.
- குத்தகைக் கொடுப்பனவுகள் நடுத்தர காலத்தில் மேற்கொள்ளப்படுவதால் காசுப்பாய்ச்சல் நன்மைகளை வழங்கும்
- பணவீக்கத்தின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பளிக்கின்றது.
- நிதி விகிதங்களில் (Financial Ratios) முன்னேற்றம் காணப்படும்.

**வாடகைக் கொள்வனவு**

வாடகைக் கொள்வனவு விற்பனை என்பது ஒரு தவணைக் கட்டண கடன் (Instalment Loan) முறைமை ஆகும். அதாவது தனிநபர் அல்லது வியாபார ஸ்தாபனம் பொருளைக் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்து அதற்கான பெறுமதியை தவணைக் கட்டண அடிப்படையில் திரும்பச் செலுத்துவதாகும். ஒரு வியாபார கடன் (Vendor Credit) வாடகைக் கொள்வனவு முறையாகும்.

வாடகைக் கொள்வனவு விற்பனை முறையில் விற்பனையாளருக்கும் கொள்வனவாளருக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்படும். பொருளைக் கொள்வனவு செய்யப்படும் பொழுது ஒரு தொகைப்பணம் கொள்வனவாளரால் செலுத்தப்படவேண்டும். இத்தொகைப் பணம் வைப்பு எனப்படும். மிகுதித் தொகை ஒப்பந்தப்படி கொள்வனவாளரால் தவணை அடிப்படையில் விற்பனையாருக்கு செலுத்தப்பட வேண்டும். இது தவணைக்கட்டணம் எனப்படும்.

**வாடகைக் கொள்வனவு விற்பனை முறை இருவகையாகச் செயற்படுத்தப்படும்.**

1. விற்பனை செய்யும் நிறுவனமே கொள்வனவாளருக்கு நேரடியாகப் பொருளை விற்பனை செய்தல். (vendor Credit)
2. கொள்வனவாளன் ஒரு நிதி நிறுவனத்திற்கூடாக கடன் / மேலதிகப்பற்றை பெற்று அந்நிதியை பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பாவிப்பது (Lender Credit)


வாடகைக் கொள்வனவு விற்பனை முறையில் பொருட்கள் விற்பனை செய்யப்படும் போது அதன் உரிமை கொள்வனவாளரைச் சென்றடைவதில்லை பொருளானது விற்பனையாளரது உரிமையாகவும் கொள்வனவாளருக்கு அது வாடகைக்கு விடப்பட்டதாகவே கருதப்படும்.

வாடகைக் கொள்வனவு முறையில் பொருளைக் கொள்வனவு செய்யும் பொழுது அவற்றின் விற்பனை விலை அதிகமானதாகவே இருக்கும்.காரணம் என்னவெனின் உடன் காசு விலையுடன் வட்டியும் சேர்க்கப்படுவதாகும்.

| | குத்தகை | வாடகைக் கொள்வனவு |
|---|---|---|
| **1.** | **உரிமை :** குத்தகை வழங்குவோர்தான் உரிமையாளர். குத்தகை பெற்றுக்கொள்பவர் நிலையான உரிமையாளர் அல்லர் | வாடகைக் கொள்வனவு அடிப்படையில் முழுப் பணமும் செலுத்திய பின்னர் உரிமை கொள்வனவாளரிடம் சென்றடையும் |
| **2.** | **வைப்பு :** குத்தகை பெறுவோர் வைப்புத் தொகை செலுத்த வேண்டியதில்லை. தற்போது நடைமுறையில் வைப்புத் தொகை செலுத்த வேண்டியுள்ளது. | வைப்புச் செலுத்த வேண்டும். |
| 3. | வட்டி குத்தகைக் கொடுப்பனவுக்குள் அடங்கும் | வட்டி தவணைக் கட்டணத்தினுள் அடங்கும் |
| 4. | வரிச்சலுகை குத்தகை கொடுப்போன் மூலதன வரிச்சலுகை பெற்றுக்கொள்ள முடியும். குத்தகை எடுத்தவன் குத்தகைக் கட்டணத்தை வரிச்சலுகையாகப் பெற்றுக் கொள்ள முடியும். | பொருளைக் கொள்வனவு செய்பவர் மூலதனதவணை வரிச்சலுகையையும் தவணைக்கட்டணத் தொகையில் கொண்டிருக்கும் வட்டித் தொகையையும் வரிச் சலுகையாகப் பெற்றுக் கொள்ள முடியும். |


***க. உலகநாதன் (AIB Sri Lanka)***

***ஓய்வுநிலை செயற்பாட்டு முகாமையாளர்***



# காணி உரிமை என்பது என்ன?

காணியுடன் சம்பந்தப்பட்ட உரிமைகள் சில சேர்ந்து இருக்கும் சந்தர்ப்பத்திலேயே காணி உரிமை என்ற வசனம் பாவிக்கப்படுகிறது. அதாவது காணியின் சில உரிமைகள் ஒன்று சேர்ந்து இருந்தாற்றான் காணி உரிமைக்காரன் என ஒருவன் அழைக்கப்படுகிறான். இவ்வுரிமைகள் மூன்று வகைப்படும் என உரோம டச்சு எழுத்தாளர்களான LEEயும் VOET உம் கூறியுள்ளனர் அவையாவன.

அ. இழந்த உரிமையை மீளப் பெறும் உரிமை.

ஆ. காணியை அனுபவிக்கும் உரிமை

இ. காணியை பராதீனப்படுத்தும் உரிமை

இம் மூன்று உரிமைகளும் இருக்கும் போதே ஒருவர் காணியின் உரிமையாளர் (Sole Owner) என அழைக்கப்படுகிறார்.

கூட்டுச் சொந்தக்காணியைப் பொறுத்த வரையில் இவ்வுரிமைகள் ஒருவரிடத்தில் இருக்க மாட்டாது. சகல கூட்டுச் சொந்தக்காரரிடம் பிரிந்து இருக்கும். சகல கூட்டு உரிமையாளரும் சேர்ந்திருக்கும் போது தான் காணியின் உரிமை அவர்களுக்கு வரும். இதனால்தான் கூட்டுச் சொந்தக்காரர் அனைவரும் சேர்ந்து ஒப்பமிட்டால்தான் ஒரு கூட்டுக் காணியை அவர்கள் விற்கலாம்.

மேலே கூறப்பட்ட மூன்று உரிமைகளும் இன்னும் பல உரிமைகளை காணிச் சொந்தக்காரனுக்குக் கொடுக்கின்றன. அவையாவன ஒருவர் பலாத்காரமாக அல்லது அநாவசியமாக ஒரு காணிக்குள் புகுந்தால் அவரை வெளியேற்றத் தேவையான உரிமையை அக்காணிச் சொந்தக்காரன் பெறுகிறான். இது இழந்த உரிமையை மீளப்பெறும் உரிமையின் கீழ் வருகிறது.

காணிச் சொந்தக்காரன் ஒருவன் காணியின் உடமையை (உரித்தேயல்ல) இழந்தால் அதனை மீளப்பெற நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்யும் உரிமை காணியை அனுபவிக்கும் உரிமையின் கீழ் கிடைக்கிறது.

காணியை பராதீனப்படுத்துதல் என்பது தமது காணியை இன்னுமொருவருக்கு விற்கும் அல்லது மாற்றிக் கொடுக்கும் அல்லது நன்கொடை கொடுத்தல் போன்றவற்றை செய்யும் உரிமையை காணியை பராதீனப்படுத்துதலின் ஒருவன் பெறுகிறான்.

## காணியை அனுபவிக்கும் உரிமையும் காணியை அழிக்கும் உரிமையும்

இதில் பல அம்சங்கள் அடங்குகின்றன. இதன் கீழ் காணிக்குள் குடியிருக்கும் உரிமை, காணிக்குள், கட்டடம்கட்டும்உரிமை, காணியை அபிவிருத்தி செய்யும் உரிமை, காணியில் இருந்து பிரயோசனங்களைப் பெறும் உரிமை போன்றவையாகும். இவ்வுரிமைகளைக் கவனிக்கும் போது காணியை நல்ல முறையில் பயன்படுத்தும் உரிமைகளாகவே அவற்றைக் காணலாம். காணியை அழிக்கும் உரிமைகள் இல்லாததையும் காணலாம்.

ஆயின் காணியின் மதிப்பைக் குறைக்கும் உரிமைகள் ஆரம்பத்தில் மிகக் குறைவாகவே இருந்தது. Bradford vs Pickles (1895) AC 587 வழக்கின் தீர்ப்பை பார்க்கும் போதும் Alleg vs

Flood (1898) AC - 1 என்ற வழக்கைப் பார்க்கும் போதும் மேற்படி உரிமையானது Doctorine of Abuse Rights ஐயும் காணியின் உரித்தாளனுக்குக் கொடுக்கிறது என்றும் கூறலாம். காணியை அழிக்கும் உரிமை என Doctorine of Abuse Right ஐ தமிழில் கூறலாம்.

## Bradford vs Pickles வழக்கு

Branford vs Pickles வழக்கின் நிகழ்வுகள் பின்வருமாறாகும். எதிராளியானவனுக்கு தனது அயலவனின் காணியின் மதிப்பைக் குறைக்க வேண்டிய தேவையிருந்தது, அதற்காக அவன் தனது காணிக்குள் பாரிய கிடங்குகளைத் தோண்டினான். இதனால் அயலவனின் காணியின் பெறுமதி குறைந்தது. ஆயினும் காணிக்காரனுக்கு அவனது காணிக்குள் தேவையானதை செய்ய உரிமையிருந்ததால் எதிராளிக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. பிரபுக்கள் சபை பின்வருமாறு கூறியது. 'That Defendant was not Liable for Intentionally intercepting by Means of Excavations on his own Land the underground water that would otherwise have flowed into the adjoining reservoir of the plaintiffs, Although his sole motive in doing so was to coerce the plaintiffs to buying his land at his own price என்றது.

இலங்கையில் ஜீனாவதி எதிர் பெரேர (1986 2SUR 12) என்ற வழக்கில் அயலவனின் காணியின் உரிமையில் தாக்கம் ஏற்படும் செயல்களை செய்யக்கூடாது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

தற்போது பாராளுமன்றச் சட்டங்கள் மூலம் Doctorine of Abuse Rights என்ற சட்டக் கொள்கையை உரித்தாளர் தன் விருப்பப்படி செய்ய முடியாமல் தடை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக தான் விரும்பியபடி தனது காணிக்குள் கட்டடத்தைக் கட்ட முடியாது. நகர அபிவிருத்தி சபையின் அனுமதியைப் பெற வேண்டும். அதேபோல் தனது காணிக்குள் மாணிக்கக்கல் அல்லது காரீயம் இருக்கிறது என்று கூறிக்கொண்டு காணிக்குள் குழிகளைத் தோண்ட முடியாது. அரச அனுமதி தேவை. ஆகவே இலங்கையின் நிலைமை என்னவெனில் சொந்தக்காரன் தான் விரும்பியபடி காணியை அழிக்கும் உரிமையைப் பெற வழியில்லை எனலாம்.

### காணியை பராதீனப்படுத்தும் உரிமை

காணியை பராதீனப்படுத்தும் உரிமையில் பின்வருவன அடங்குகின்றன.

அ. விற்பனை

ஆ. நன்கொடை

இ. இறுதி விருப்பாவணம் மூலம் உரித்தை இல்லாமலாக்குதல்

ஈ. காணி உரித்தாளரின் பின்னர் வழியுரிமையாளருக்கு காணி சொந்தமாகுதல்

உ. நீதிமன்றத் தீர்ப்பால் உரிமை இழத்தல்

ஊ. அரச சுவீகரிப்பால் உரிமையை இழத்தல் என்பவையாகும்.

இம்முறைகளில் உரித்தை எவ்வாறு இழக்கிறார்கள் எனப் பார்ப்போம்.

## விற்பனை

விற்பனையின் மூலம் ஒருவர் உரித்தை இழக்க வேண்டுமானால் மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் அவ்விற்பனை நடைபெற வேண்டும். வேறு எந்த விதத்திலும் நடைபெறும் விற்பனையால் உரித்து வராது. மேற்படி மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விற்பனை நடைபெற்றது என்பதை நிரூபிக்க வேண்டுமானால் பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டும்.

அ. அனுமதி பெற்ற பகிரங்க நொத்தாரிஸ் ஒருவர் முன்னிலையிலையில் விற்பனை நடைபெற வேண்டும்.

ஆ. விற்பனை உறுதியில் சாட்சிக்காரர் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் கையொப்பம் இட வேண்டும்.

இ. பணப்பரிமாறல் நொத்தாரிஸ் முன்னிலையில் நடைபெற வேண்டும். இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் கூற வேண்டும். நொத்தாரிஸ் முன்னிலையில் பணப்பரிமாறல் நடைபெறாமல் வேறு வழிகளில் நடைபெறுவதுண்டு. பெறுமதியைக் கூட்டியும் குறைத்தும் எழுதும் சந்தர்ப்பத்தில் இது நடைபெறுகிறது. ஆயினும் பின்னர் நொத்தாரிசு வழங்கும் சாட்சிப்பகுதியில் தன்முன்னிலையில் பணப்பரிமாறல் நடைபெறவில்லை யென்றும் ஆயினும் காணிச் சொந்தக்காரர்தான் பணத்தை பெற்றுக் கொண்டதாகவும் கூறுவதுண்டு. இறுக்கமான பொருள்கோடல் செய்தால் இவ்விற்பனை மோசடிக் தடுப்புச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் நடைபெறவில்லை என்று கூறலாம்.

ஈ. நொத்தாரிசும், காணி உரிமையாளரும் சாட்சிக்காரரும் இம் மாற்றல் உறுதியில் கையொப்பம் இடல் வேண்டும்.

மேலே கூறிய முறை பற்றி வேறு விதத்தில் நடைபெறும் விற்பனை செல்லாமல் போகலாம். ஆயினும் சில நீதிமன்றங்கள் இவற்றைக் கவனிப்பதில்லை. மேலும் நிறைவேற்றல் (Transfer) உறுதியொன்றை நிறைவேற்றும்போது மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவு மட்டுமல்ல நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள பிரிவுகளுக்கு அமையவும் அக் காணிகள் எழுதப்பட வேண்டும்.

இது நடைமுறையில் இல்லை. விற்பவர் பெயரில் உறுதியிருக்கிறதா? எனப் பார்த்து உறுதியை எழுதுவதுண்டு. உண்மையில் உறுதியொன்று எழுத முன்னர் அக்காணியின் உரித்து பட்டியல் அல்லது வரலாற்றைக் குறிக்கும் காணிக் கந்தோர் பதிவுகளைப் பார்த்து உரித்து உரியவரிடமிருந்து மற்றவர்களுக்கு ஒழுங்காக மாறியிருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். உரித்து சரியாக மாறாவிட்டால் விற்பனை செல்லுபடியாகாது. ஆனால் பலர் இதனை கவனிப்பதில்லை.

உரித்துள்ளவரே உரித்தை மாற்ற வேண்டும் என்பது சட்ட விதியாகும். ஆயினும் அட்டோர்னித் தத்துவப்பத்திரம் உள்ள ஒருவர் காணியை உரித்தாளருக்காக மாற்றமுடியுமா? என்று வினா வழக்கில் எழுந்தால் அதில் இருந்து விடுபட பலகாலம் செல்லும். ஆகவே அட்டோர்னித் தத்துவப்பத்திரம் மூலம் காணியை மாற்றிப் பெறும்போது கவனமாக இருக்க வேண்டும்.

இதனை யாரும் பெரிதாகக் கவனிப்பதில்லை. எழுத வந்தால் போதும் உறுதியை எழுதி முடித்திடுவோம் என்று நினைப்பவர்களே அதிகம் பேர் உள்ளனர். இது சம்பந்தமான லத்தீப்

எதிர் மன்சூர் என்ற வழக்கின் தீர்ப்பு பிரயோசனமானது. இத்தீர்ப்பு ஓய்வுநிலை உயர் நீதிமன்ற நீதியரசரால் எழுதப்பட்ட தீர்ப்பாகும்.

உரோம டச்சுச் சட்டத்தின்படி உரித்து உறுதி ஒன்று எழுதப்பட்டு அந்த உறுதியை வாங்கியவருக்கு கையளிப்பதன் மூலம் உடமை கையளிக்கப்பட்டு விட்டது என்பதை அப்புஹாமி எதிர் அப்புஹாமி 1880ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பின்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு இலங்கையில் நடைமுறையில் உள்ளது. காணியை கையளிக்காமல் இருந்தாலும் காணி மாற்றம் நடைபெற்று விட்டது என்றே சட்டம் கொள்ளும்.

Exepito Reivinditae ET Tradition னின் கீழ் சொந்தக்காரன் தனது பிரதிநிதியின் மூலம் தனது சொத்தை மாற்றிக் கொடுக்கலாம் என்பதும் நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**ஏமாற்றிப் பெற்ற உரித்து மாற்றல் உறுதியை இரத்துச் செய்யும் முறை**

சில சந்தரப்பங்களில் சில குடும்பத்தவர்களுக்கு அவசிய தேவைகளுக்காக பணம் தேவைப்படுவதுண்டு. உதாரணமாக வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு, மகளின் விவாகத்தை நடத்துவதற்கு, பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு. இதை ஒத்த பல தேவைகளுக்காக சிலருக்குப் பணம் தேவைப்படுவதுண்டு. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்களிடம் போதியளவு பணம் இருப்பதில்லை. இதனால் அவர்கள் தாங்கள் வசிக்கும் வீட்டை அல்லது அவர்களிடம் உள்ள வேறு காணிகளை காசு உள்ளவர்களிடம் அல்லது வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களிடம் அடைவு வைத்துக் கொண்டு கடன் கேட்பதும் உண்டு. அவர்களும் கடன் கொடுக்க உடன்படுவதும் உண்டு. இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் ஒருவரது காணியின் உரித்து ஏமாற்றிப் பெறப்படுகிறது. எது எப்படியெனப் பார்ப்போம்.

கடன் கேட்பவர் தனது காணியை ஈடாக அல்லது நம்பிக்கைக்காக வைத்துக் கொண்டு கடன் கேட்கும்போது கடன் கொடுக்க உடன்படுபவர் கடன் கேட்பவரின் காணியை தனது பெயருக்கு மாற்றித்தருமாறும் கடனைத்திருப்பிக் கொடுத்ததும் உறுதியை அதாவது அவரது காணியை திருப்பக் கடன்பெற்றவர் பெயருக்கு திருப்பி எழுதித்தருவதாகவும் கூறி காணியின் உரித்தை உறுதி மூலம் மாற்றிப்பெறுவதுண்டு. நம்பிக்கையின் அடிப்படையில் பணம் தேவைப்பட்டவரும் இதற்கு சம்மதிப்பதுண்டு. இதன் கீழேயே ஏமாற்றிப்பெறும் உறுதிகள் எழுதப்படுகின்றன எனலாம்.

அது எவ்வாறு எனப் பார்ப்போம். மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் படி ஒரு காணியை ஈடு வைக்கவோ அல்லது கொடையழிக்கவோ உரித்து மாற்றவோ வேண்டுமானால் அது நொத்தாரிஸ் முன்னிலையிலும் இரண்டு சாட்சிக்காரர் முன்னிலையிலும் எழுதப்பட வேண்டும். ஆகவே பணத்தைகொடுப்பவர் தனக்கு விசுவாசமான அல்லது கீழ்ப்படிவான நொத்தாரிஸை அணுகி இவ்விடயத்திற்கான உறுதியைத் தயாரிக்குமாறு கேட்பார். அவர் எப்படித் தயாரிக்க வேண்டும் என்று வினவினால் மாற்றல் (Transfer) உறுதியாக அதைத் தயாரிக்குமாறு அல்லது ஒன்றுமே இல்லாது வெறும் Transfer பத்திரத்தில் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு பின்னர் தேவையானவற்றை நிரப்பலாம் என்றும் கூறுவதுண்டு.

பணத்தைப் பெறுபவர் வந்ததும் நொத்தாரிஸ் அவரிடம் பத்திரத்தில் கையெழுத்தை வாங்குவார். பணம் வாங்குபவர் ஓரளவு படித்தவராக இருந்தால் அதில் எழுதியுள்ளதை வாசித்து சில சந்தேகங்களைக் கேட்டாலும் நொத்தரிஸ் நீங்கள் பணத்தை திருப்பிக் கொடுத்ததும் காணி

உங்களிற்கு திருப்பப்படும் இதில் சந்தேகமில்லை என்று கூறுவார். பணம் தேவை என்பவருக்கு பணத்தைப் பெற ஆவல் இருப்பதால் மனம் சஞ்சலப்பட்டாலும் நொத்தாரிஸால் தயாரிக்கப்பட்ட மாற்றல் பத்திரத்தில் கையொப்பம் வைத்துவிடுவர். பின்னர் பணத்தை எடுத்துக்கொண்டு சென்று விடுவர்.

காணியை மீட்க இவர் கடன் தந்தவரிடம் சென்று தான் காணியை மீட்க விரும்புபவதாகவும் அதற்குரிய பணத்தையும் வட்டியையும் கொண்டு வந்திருப்பதாகவும் கூறும் போதே காணியை ஈடு வைத்தவருக்கு அதிர்ச்சியான சம்பவத்தை கடன் கொடுத்தவர் கொடுப்பார். எனக்கு பணம் தேவைப்பட்டதால் அந்தக்காணியை வேறு ஒருவரிடம் ஈடுவைத்துத்தான் பணத்தைப் பெற்றதாக அல்லது வங்கியில் வைத்ததாக அல்லது விற்று விட்டதாகக் கூறுவார். அல்லது அதை ஒத்தவற்றைக் கூறுவார்.

அப்படி எது நடந்தாலும் கடனைப் பெற்றவர் அந்தக் காணியை மீளப்பெற முடியாது. ஏனெனில் அந்தக் காணியை ஈடுவைக்கவே கடன்பெற்றவர் விரும்பினாலும் பத்திரத்தில் கையொப்பம் வைக்கும் போது மாற்றல் உறுதியிலேயே கையொப்பம் வைத்தார் என்பதை அவர் மறுக்க முடியாது, அத்தகைய சந்தர்ப்பத்தில் கடன்பெற்றவர் நீதி மன்றம் செல்ல வேண்டும். நீதிமன்றம் கடன் பெற்றவருக்கு சாதகமாக இலகுவில் தீர்ப்பை வழங்க முன்வராது. அதற்கு காரணம் என்னவெனில் சாட்சியல் சட்டம் பின்வருமாறு கூறுகிறது. ஒரு ஆவணம் சட்ட அந்தஸ்தைக் கொண்டு இருக்க வேண்டுமானால் சாட்சியல் சட்டத்தின் பிரிவுகளிற்கு அமைய அது எழுதப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு எழுதப்பட்ட ஆவணங்களின் வாசகங்களுக்கு முரணான ஒப்பந்தம் ஒன்று இருந்தது என்று காட்ட முடியாது என்றும் சாட்சியல் சட்டத்தின் 91,92 ஆம் பிரிவுகள் எடுத்துக் காட்டுகின்றன எனவும் நீதிமன்றம் கூறும். இது உண்மையேயாயினும் பின்வரும் நிகழ்வுகள் இருந்தன என்பதை எடுத்துக்காட்டினால் சில சந்தர்ப்பங்களில் நீதிமன்றம் உண்மையை உணர்ந்து கடன் பெற்றவருக்கு சார்பாகத் தீர்ப்பு வழங்கும்.

கடன் பெற்றவருக்கு சார்பான தீர்ப்பைப் பெற வேண்டுமானால் கடன் பெற்றவர் தான் ஈடுவைத்த காணி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டத்தின் 5 ஆம் 83 ஆம் பிரிவுகளின் கீழ் வருகின்றது என்று அவர் நிரூபிக்க வேண்டும்.

ஆகவே இத்தகைய வழக்கில் சாட்சியல் சட்டத்தின் 91,92 ஆம் பிரிவுகளையும் நம்பிக்கைச் பொறுப்புச் சட்டத்தின் 5, 83 ஆம் பிரிவுகள் கூறுவது என்ன என்பது ஆராயப்பட வேண்டும். இது சம்பந்தமாக இலங்கையின் மாவட்ட நீதி மன்றங்கள், உயர் நீதி மன்றம், பிரபுக்கள் சபை ஆகியன பல வழக்குகளை ஆராய்ந்து தீர்ப்புக்களை வழங்கியுள்ளன. இவற்றில் முக்கியமான வழக்குகள் வள்ளியம்மை ஆச்சி எதிர் அப்துல் மஜீட் என்ற வழக்கும் சவரிமுத்து எதிர் தங்க வேலாயுதம் என்ற வழக்கும் தயாவதி எதிர் குணசேகர என்ற வழக்கும் ஆகும். இவற்றைக் கட்டாயம் நீதி ஆர்வலர்கள் படிக்கவேண்டும். சரியான முடிவுக்கு இவ்வழக்குகள் உதவுகின்றன.

## வள்ளியம்மை ஆச்சி எதிர் அப்துல் மஜீட் வழக்கு

இவ்வழக்கின் நிகழ்வுகள் பின்வருமாறாகும். இக்காணியின் பெறுமதி ரூபா 460,000 ஆகும். காணியுரிமையாளர் எவ்வித நிபந்தனையும் இன்றி இக்காணியை ரூபா203,256 க்கு உரித்து மாற்றம் செய்தார் எனக் கூறப்பட்டது. இந்த மாற்றத்தால் பெறப்பட்ட பணத்தை செலுத்திய பின்னர் காணி உரித்தை மாற்றம் செய்து பெற்றவர் மீளவும் உரித்தை மாற்றிக்

கொடுத்தவருக்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று ஒத்துக் கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது இந்த ஒப்பந்தம் வாய் மூலமே இருந்தது. என்று கூறப்பட்டது.

உரித்தை மாற்றிப் பெற்றவர் (கடன் கொடுத்தவர்) சடுதியாக இறந்து விட்டார் கடன்கொடுத்தவரின் மனைவியிடம் கடனைப் பெற்றவர் தான் பெற்ற கடனையும் வட்டியையும் கொடுத்து காணியை மீளப்பெற விரும்பி அதனைப்பெறச் சென்ற போது கடன் கொடுத்தவரின் மனைவி அப்படி ஒரு ஒப்பந்தம்இந்த காணி மாற்றத்தில் இல்லை என்றும் நம்பிக்கை சொத்து ஒன்று சிருஷ்டிக்கப்படவில்லை என்றும் வாதாடினார். இதனால் கடனை பெற்று சொத்தை மாற்றியவர் கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழக்கில் தென்படும் நிகழ்வுகளை (Attending Circumstance) பரிசீலனை செய்த பின்னர் அச்சொத்து நம்பிக்கை பொறுப்பு சொத்து என்றும் அதனை பெற உரித்து மாற்றிக் கொடுத்தவருக்கு (கடன் பெற்றவருக்கு) உரித்து உண்டு என்றும் தீர்த்தது.

இலங்கை உயர் நீதிமன்றத்திற்கு இறந்தவரின் மனைவி மேன்முறையீடு செய்தார். உயர்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்தது.

உயர்நீதி மன்ற தீர்ப்பை எதிர்த்து இறந்தவரின் மனைவி பிரபுக்கள் சபைக்கு மேன்முறையீடு செய்தார். மேன்முறையீட்டை பரிசீலனை செய்த பிரபுக்கள் சபை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்ததுடன் பின்வரும் தீர்மானங்களையும் செய்தது.

அ) சொத்து ஒன்றை உரித்து மாற்றம் செய்த பின்னர் தென்படும் நிகழ்வுகளை கொண்டு (Attending Circumstances) அங்கு நம்பிக்கை பொறுப்பு சிருஷ்டிக்கப்பட்டதா? இல்லையா? என்பதை பார்க்க நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின 5,83 ஆம் பிரிவுகளின் கீழ் வாய் மூலச்சாட்சியம் அளிக்கலாம் என்றும்,

ஆ) நம்பிக்கை பொறுப்புச் சட்டத்தின் 5ஆம் 83ஆம் பிரிவின் கீழ் வாய்மொழிமூலம் நம்பிக்கை பொறுப்பு ஒன்று உருவாக்க இடம் உள்ளது என்றும் அவ்வாறு உருவாக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பு மோசடித்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவிற்கு அமைய நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறப்படவில்லை என்றும்,

இ) இறந்தவரின் மனைவி மேற்படி சொத்து நம்பிக்கை பொறுப்பு சொத்து இல்லை என்று கூறுவது வஞ்சனையான செயல் என்று தீர்த்தது.

மேற்படி வழக்கிற்கு அனுசரனையாக பின்வரும் வழக்கு உள்ளது. சவரிமுத்து எதிர் தங்கவேலாயுதம் இவ்வழக்கில் பிரபுக்கள் சபை பின்வருமாறு கூறியது.

**சவரிமுத்து எதிர் தங்கவேலாயுதம் வழக்கு**

மோசடித் தடுப்புக்கட்டளைச் சட்டம் உரித்து மாற்றம் ஒன்று மோசடியாக நடைபெறக்கூடாது என்பதற்காகவே இரு சாட்சியாளர்களையும் நொத்தாரிஸ் முன்னிலையிலும் அது நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறுகிறது. இத்தகைய சாட்சியாளர்களும் நொத்தாரிசும் மோசடியில் ஈடுபட்டதாக வழக்காளி குற்றம் சாட்டும் போது மோசடி தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2ம் பிரிவின் ஏற்பாடுகள் தளர்வு செய்யப்பட வேண்டும் என்றும் அந்த சாதனம் மோசடியாக இயற்றப்பட்டது என்ற குற்றச்சாட்டில் இருந்து விடுபட வாய்முறைச் சாட்சியம் அளிக்கப்படலாம் என்றது.

**தயாவதி எதிர் குணசேகர வழக்கு**

இந்த வழக்கில் வழக்காளியும் எதிராளியும் ஒரு காணி சம்பந்தமாக ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டனர். இதன் படி கடன் பெற்றவர் காணியை ஈடுவைத்தவர். 3 வருடங்களுக் கிடையில் கடன் பெற்றவர் காணியை மீட்காவிட்டால் அதன் உரிமையை இழப்பார் என்று கூறப்பட்டுள்ளதால் வழக்காளி அதனை மீட்காவிட்டாலும் நம்பிக்கைப் பொறுப்புச்சட்டத்தின் கீழ் எதிராளி அதனை வழக்காளிக்கு கொடுக்க வேண்டுமென்று மாவட்ட நீதிமன்றம் தீர்த்தது.

எதிராளி இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச்செய்தது. மேலும் மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியது என்னவெனில் இங்கு நம்பிக்கை சொத்து ஒன்று உருவாக்கப்படவில்லை என்றும் ஒப்பந்தச் சட்டம் மட்டுமே இங்கு செல்லும் என்றும் இதன்படி வழக்காளி காணியை மீட்காததால் அதனை திருப்பி கொடுக்கத்தேவையில்லை என்றது.

எதிராளி இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். உயர்நீதி மன்றம் பின்வருமாறு கூறியது. சாட்சியியல் சட்டத்தின் 92ஆம் பிரிவு ஒருவர் ஒரு காணியை உரித்து மாற்றம் செய்யும் போது அக்காணியின் பயன் உரித்தை (Beneficial interest) விட்டுக் கொடுக்கவில்லை என எடுத்துக்காட்ட சாட்சியங்களை முன் வைப்பதை தடுக்கவில்லை என்றும் விற்றவரிடமும் வாங்கியவரிடமும் நம்பிக்கை பொறுப்பு ஒன்று சிருஷ்டிக்கப்பட்டது என்பதை காட்ட(Extrisic) வெளிச்சாட்சியங்களை முன்வைக்கலாம் என்றும் கூறி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச் செய்கிறது. எதிராளி பின்வரும் நிகழ்வுகளை முன்வைத்தார்.

அ. ரூபா17000/- பெற்றுக் கொண்டு அதற்கு பற்றுச்சீட்டும் பின்னர் அப்பணத்தை பெற்றுக்கொண்டு காணியை ஒப்படைப்பதாக கூறிய ரசீதுகளையும் முன்வைத்தார்.

ஆ. காணியை விற்றவர் காணியை விற்றதன் பின்னரும் அவரது கட்டுப்பாட்டிலேயே காணியை வைத்திருந்தார்.

இ. இக்காணியின் பெறுமதி 80000/- ரூபாவாம். ஆனால் அதனை 17000/- ரூபாவிற்கே எழுதியிருந்தது.

ஈ. நியாயமற்ற முறையில் இம்மாற்றம் நடந்தது.

ஆகவே ஒரு காணியின் உரித்து மாற்றம் செய்ததன் பின்னரும் அக்காணியைப் பொறுத்தவரையில் தென்படும் நிகழ்வுகள் அல்லது தோன்றும் நிகழ்வுகள் (Attending Circumstances) அக்காணி பரிபூரண விற்பனையா? அல்லது திருப்பி எடுக்கும் எண்ணத்துடன் வைக்கப்பட்டதா? என்பதை பார்க்க நீதிமன்றம் தென்படும் நிகழ்வுகளை பார்க்க வேண்டும் என்றார்.

**தொகுப்புரை**

ஏமாற்றிப்பெறும் உரித்து மாற்றல் உறுதிகளை பொறுத்தவரையில் அவ்வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தில் மட்டும் முடிவுக்கு வருவதில்லை. மேன்முறையீடுகளுக்கு கட்டாயம் செல்கின்றன. சட்டப்பிரச்சினைகள் மேல்நீதிமன்றங்களாலேயே தீர்த்து வைக்கப்படுகின்றன. இவ்வழக்குகளுக்கு முக்கியமாக தேவைப்படுவது நொத்தாரிஸால் எழுதப்பட்ட உறுதியல்ல. உறுதி எழுப்பட்ட பின்னர் இடம்பெறும் நிகழ்வுகளேயாகும்.

தென்படும் நிகழ்வுகள் விற்றவர் தனது பொருளாதார நஷ்டத்தால் பணத்தை பெற்றுள்ளார் என்பதை நிரூபித்தால் மட்டும் போதாது. அப்பணத்தை திருப்பி கொடுத்து காணியைப் பெறமுயற்சித்தார் என்பதையும் காட்டவேண்டும்.

இன்று பலர் இத்தகைய வழக்குகளை தாக்கல் செய்து தீர்ப்பை தமக்குச் சாதகமாகப் பெற வழிதேடுகின்றனர். விற்றதன் பின்னர் அக்காணி அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததா? காணியின் பெறுமதியிலிருந்து மிகக்குறைவான விலைக்கு இக்காணி விற்கப்பட்டதா? தான் பெற்ற பணத்திற்கு வட்டி வாங்கப்பட்டதா? கடன் பெற்றவர் அக்காணியை மீளப்பெற முயற்சித்தாரா? என்பதை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்கள் அக்காணியை மீளப்பெறலாம் எனலாம்.

நன்றி

**K.G.ஜோன்**
சட்டத்தரணி

மேற்படி கட்டுரை ஒக்டோபர் 28.2015 புதன்கிழமை வீரகேசரி இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

# Vanni District Bank of Ceylon Pensioners' Association A.G.M in progress



Mr. Guy de silva, Former Prisident addressing
Seated - Mr. Balasubramaniam, Mr. Thiruchchelvam, Mr. Abeysirigunawardana, and Mr. Sukumaran



Address by Mr. Sukumaran - Secretary. Seated - Mr Balasubramaniam,

Mr. Thirchchelvam, Mr. Abeysirigunawardana



# சர்வதேச வியாபாரத்தில் இலத்திரனியல் வர்த்தகத்தின் முக்கியத்துவம்

## Importance of Electronic Commerce in International Trade

### 1.0 அறிமுகம்

இலத்திரனியல் வர்த்தகப் பிரயோகமானது, 1970களின் ஆரம்பத்தில் இலத்திரனியல் நிதி மாற்றம் போன்ற புத்தாக்கங்களுடன் ஆரம்பமானது எனலாம். எவ்வாறாயினும், இந்தப்பிரயோகமானது பெரிய கூட்டுத்தாபனங்களுக்கும் ஒரு சில சிறிய தொழில் நிறுவனங்களுக்கும் மட்டும் வரையறுக்கப்பட்டதாக ஆரம்பத்தில் காணப்பட்டது. இலத்திரனியல் தரவு பரிமாற்றம் வந்த பின்னர் இலத்திரனியல் வர்த்தகமானது நிதி மாற்றங்களிலிருந்து ஏனைய வகையான பரிமாற்ற முறைவழியாக்கத்துக்கு விரிவுபடுத்தப்பட்டது. அத்துடன் நிதி நிறுவனங்களுக்கு மேலதிகமாக, உற்பத்தியாளர்கள், சில்லறை வியாபாரிகள், சேவை வழங்குநர்கள், ஏனைய நிறுவனங்கள் போன்றன பங்குபற்றும் அளவிற்கு விரிவுபடுத்தப்பட்டது. இணையமானது வர்த்தக மயமாக்கப்பட்டதன் பின்னர் பல மில்லியன் கணக்கான மக்கள் பங்கு பற்றும் வாய்ப்பு கிடைத்தமையினால் இலத்திரனியல் வர்த்தக பிரயோகங்கள் விரைவாக விரிவடைந்து வருகின்றன.

### 2.0 இலத்திரனியல் வர்த்தகத்தினை வரையறுத்தல்

### Defining Electronic Commerce

இலத்திரனியல் வர்த்தகம் அல்லது மின்னணு வர்த்தகம் என்பது இணையத்தினை உள்ளடக்கிய கணனி வலையமைப்புக்கள் மூலமாக பொருட்கள், சேவைகள், தகவல்கள் என்பனவற்றினை வாங்குவதையும் விற்பனை செய்வதையும் விபரிக்கின்ற ஒரு வளர்ந்து வரும் எண்ணக்கருவாகும். எவ்வாறாயினும், இலத்திரனியல் வர்த்தகத்திற்கு பல்வேறு நோக்கில் பல வேறுபட்ட வரைவிலக்கணங்களினைக் கொடுக்கமுடியும்.

ஒரு தொடர்பாடல் நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொலைபேசி இணைப்புக்கள், கணனி வலையமைப்புக்கள், அல்லது ஏதாவது ஊடகம் மூலமாக தகவல், பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது கொடுப்பனவுகள் ஆகியவற்றினை வழங்குவதனைக் கருதுகின்றது.

ஒரு தொழில் செய்முறை நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது தொழில் நிறுவன நடவடிக்கைகளினதும் வேலைப்பாய்ச்சல்களினதும் தன்னியக்கவாக்கம் நோக்கிய தொழில்நுட்பத்தின் பிரயோகமாகும்.

ஒரு சேவை நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது பொருள் தரத்தினை முன்னேற்றி, சேவை வழங்கலின் வேகத்தினை அதிகரித்து, நிறுவனங்கள் வாடிக்கையாளர்கள் முகாமைத்துவம் போன்றவற்றின் சேவைச் செலவினைக் குறைக்கின்ற ஒரு கருவியாகும்.

ஒரு தொடரறா நோக்கிலிருந்து பார்க்கும் போது இலத்திரனியல் வர்த்தகம் என்பது இணையம் மற்றும் ஏனைய தொடரறா சேவைகள் மூலமாக பொருட்கள், தகவல்களினை வாங்குவதற்கும் விற்பதற்குமான செயல் வல்லமையினை வழங்குகின்றது எனலாம்.

மேலே கூறப்பட்ட அனைத்து வரைவிலக்கணங்களும் பெறுமதியானவை. இலத்திரனியல் வர்த்தகமானது வேறுபட்ட வலையமைப்புக்கள் மூலமாக வியாபார நடவடிக்கைகளினை நிறைவேற்றுகின்ற பெரும் முன்னேற்றங்களினை ஏற்படுத்தி வருகின்றது எனலாம். இத்தகைய முன்னேற்றங்களினால் சிறந்த தரம், உயர்வான வாடிக்கையாளர் திருப்தி, சிறந்த நிறுவனத் தீர்மானம் எடுத்தல் போன்ற சிறந்த செயற்றிறனுக்கு இட்டுச் செல்வதுடன் உயர்வான பொருளாதார வினைத்திறன், உயர்வேகம், துரிதத்தன்மை, அல்லது நிகழ்நேர பரிமாற்றம் போன்ற மிக விரைவான பரிமாற்றத்துக்கும் வழிகோலுகின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்தினை இன்னொரு வழியில் பின்வரும் இரண்டு கூறுகளாக பிரித்து நோக்கலாம்.

* நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை
* இலத்திரனியல் சந்தைகள்

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமையானது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கிடையேயான தகவல் பாய்ச்சலுடன் தொடர்புபட்டதாகும். இதன் பிரதான நோக்கம் இலத்திரனியல் தரவு பரிமாற்றத்தினைப் பயன்படுத்தி கட்டளைகள், சிட்டைகள், பணக் கொடுப்பனவுகள் போன்ற வினைத்திறனான பரிமாற்று முறை வழியாக்கத்தினை மேற்கொள்வதாகும். சகல தொடர்புகளும் முன்னதாகவே நிர்ணயிக்கப் பட்டிருக்கும். இங்கு பேரம் பேசுதல் என்பது இருக்காது. மாறாக நிறைவேற்றுகை காணப்படும்.

இலத்திரனியல் சந்தைகள் என்பது வாங்குபவர்களும் விற்பனையாளருக்கும் ஒரு கட்டளையில் உடன்பட்டு நிறைவேற்றுகையானது தொடரறா அல்லது பின்தொடர் மூலமாக முடிக்கப்படுகின்றது. நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகள் வியாபாரத்துக்கு வியாபாரமாக பயன்படுத்தும் போது இலத்திரனியல் சந்தையானது வியாபாபரத்திற்கு வியாபாரமாகவும் வாடிக்கையாளருக்கு வியாபாரமாகவும் தொழிற்படும் இரண்டு இயல்புகளையும் கொண்டிருக்கின்றது.

## 2.1 நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகளின் நோக்கம்

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமை என்பது பல தொழில் பங்காளர்கள் சூழ்ந்து கொள்கின்ற ஐக்கியப்படுத்தப்பட்ட ஒரு முறைமையாகும். ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமையானது ஒரு நிறுவனம் மற்றும் இதனுடைய வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரினைக் கொண்டிருக்கும். நிறுவனங்களுக் கிடையேயான தகவல் முறைமை மூலமாக வழங்குனர்களும் விற்பனையாளர்களும் தங்களுடைய நாளாந்த தொழில் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துகின்றனர். தகவலானது முன்னதாகவே ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவங்களினைப் பயன்படுத்தி தொடர்பாடல் வலையமைப்புக்கள் மூலமாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. ஆகவே, தொலைபேசி அழைப்புக்கள், காகித ஆவணங்கள், அல்லது தொழில் தொடர்புகள் என்பன தேவையில்லாது போகின்றது. நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் இணையத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றன

**நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் :-**

* நாளாந்த வியாபார பரிமாற்றங்களினது செலவினைக் குறைக்கின்றது.
* பிழைகளினை குறைத்து, தகவல் பாய்ச்சலின் தரத்தை முன்னேற்றுகின்றது.
* காகித நிரற்படுத்தலுடன் தொடர்புபட்ட காகிதம், வினைத்திறனற்ற தன்மை, மற்றும் செலவீனம் போன்றவற்றினை நீக்குகின்றது.
* பாவனையாளர்களுக்கான வியாபார செய்முறையினை இலகுவாக்குகின்றது.

## 2.2 நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளின் வகைகள்

## Types of Inter organizational System

நிறுவனங்களுக்கிடையேயான தகவல் முறைமைகள் பல்வேறு வியாபாரச் செயற்பாடுகளினை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் சில இலத்திரனியல் வர்த்தகத்துடன் தொடர்பற்ற செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

நிறுவனங்களுக்கிடையேயான முறைமைகளில் மிகவும் பிரதானமாக ஐந்து வகைகள் காணப்படுகின்றன.

* இலத்திரனியல் தரவு பரிமாற்றம்
* இலத்திரனியல் நிதிமாற்றம்
* இலத்திரனியல் வடிவங்கள்
* ஒருங்கிணை செய்தியிடல்
* பகிர்ந்தளிக்கப்பட்ட தரவுத்தளங்கள்

## 2.3 இலத்திரனியல் சந்தைகள்

இலத்திரனியல் சந்தைகள் வியாபாரத்தினை நடாத்துவதற்கான ஒரு வாகனமாக நிறுவனங்களுக் கிடையேயான முறைமைகளுடன் இணைந்து விரைவாக வளர்ந்து வருகின்றது. ஒரு சந்தை என்பது தகவல், பொருட்கள், சேவைகள், கொடுப்பனவுகள் போன்றவற்றினைப் பரிமாற்ற ஒருங்கிணைந்ததும் உறவுமுறை சார்ந்ததுமான ஒரு வலையமைப்பாகும். சந்தைக்கான இடமானது இலத்திரனியல் வடிவில் இருக்கும் போது விற்பனை நிலையமானது ஒரு பௌதீக கட்டிடத்தினைக் கொண்டிருக்கமாட்டாது. ஆனால் ஒரு வலையமைப்பு வழியிலான இடமாக இருப்பதுடன் இங்கு வியாபார பரிமாற்றங்கள் நிகழும்.

இலத்திரனியல் சந்தையானது வாங்குபவர்களும், விற்பனையாளர்களும் சந்திக்கும் இடமாகும். சந்தையானது வங்கிகளுக்கிடையேயான பணத்தினை மாற்றீடு செய்வது உட்பட எல்லா அவசியமான பரிமாற்றங்களினையும் கையாள்கின்றது. இலத்திரனியல் சந்தையில் பரிமாற்றங்களைக் கையாள்பவர்கள், வாங்குனர்கள், தரகர்கள், விற்பனையாளர்கள் போன்ற முதன்மையான பங்குபற்றுநர்கள் இருப்பதுடன் அவர்கள் வேறுபட்ட இடங்களிலிருந்து ஒருவரை மற்றவர்கள் மிக அரிதாகவே தெரிந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இடைப்பிணைப்பு வழிகளானது குழுவினர்களுக்கிடையே வேறுபடுவதுடன் நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி மற்றும் குழுக்களுக்கிடையே மாறுபாடுடையதாகவும் காணப்படுகின்றன.

## 3.0 நிறுவனங்களுக்கான நன்மைகள்

இலத்திரனியல் வர்த்தகமானது தேசிய சந்தைகளிலிருந்து சர்வதேச சந்தைகளுக்கு சந்தைப்பரப்பினை விரிவுபடுத்தியுள்ளது. மிகக் குறைந்தளவான மூலதனச் செலவுகளுடன் ஒரு கம்பனி இலகுவாகவும், விரைவாகவும் கூடுதலான வாடிக்கையாளர்கள், சிறந்த வழங்குனர்கள், மிகவும் பொருத்தமான தொழில் பங்காளர்கள் ஆகியோரை உலகளாவிய ரீதியில் கொண்டிருக்கும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது காகித அடிப்படையிலான தகவல்களினை உருவாக்குதல், நிரற்படுத்துதல், பகிர்ந்தளித்தல், களஞ்சியப்படுத்தல், மீட்டுப்பார்த்தல் போன்றவற்றுக்கான செலவினைக் குறைக்கின்றது. உதாரணமாக, ஒரு இலத்திரனியல் கொள்வனவு செய்முறை முறைமையினை அறிமுகப்படுத்துவதன் மூலமான கம்பனிகள் கொள்வனவு நிர்வாகச் செலவினை கணிசமானளவு குறைத்துக் கொள்ள முடியும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது இழுவகை வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் வசதியின் மூலமாக குறைக்கப்பட்ட இருப்புக்களுக்கும் மேந்தலைகளுக்கும் அனுமதியளிக்கின்றது. ஒரு இழுவகை முறையில் செய்முறையானது வாடிக்கையாளரின் கட்டளையிலிருந்து ஆரம்பித்து உடனடிநேர செய்முறையினைப் பயன்படுத்துகின்றது. இது பொருள் வாடிக்கையாளர் மயமாக்கும் குறைந்தளவான இருப்புச் செலவுகளுக்கும் வழிவகுக்கின்றது.

* இலத்திரனியல் வர்த்தகமானது மூலதனச் செலவுகளுக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளினைப் பெறுவதற்கும் இடையிலான நேரத்தினைக் குறைக்கின்றது.

* இலத்திரனியல் வர்த்தகமானது வியாபார செய்முறை மீளப்பொறியமைத்தல் முயற்சிக்கு ஆதரவளிக்கின்றது.செய்முறைகள் மாற்றப்படும் போது விற்பனையாளர்கள் அறிவுசார் தொழிலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரின் உற்பத்தித் திறனானது நூறு வீதம் அல்லது அதற்கு மேலாக அதிகரிக்கப்பட முடியும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது தொலைத்தொடர்பு செலவினை மிகக் குறைவாக வைத்துள்ளது. இணையமானது பெறுமதிச் சேர்க்கை வலையமைப்புக்களினை விட மிகவும் மலிவானதாகக் காணப்படுகின்றது.

## 3.1 நுகர்வோருக்கான நன்மைகள்

* இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் கூடுதலான தெரிவுகளினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. அவர்கள் பல விற்பனையாளர்களிடமிருந்தும் பொருட்களிலிருந்தும் தெரிவு செய்யமுடியும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது மிகவும் குறைந்த செலவில் பொருட்கள், சேவைகளினை வாடிக்கையாளர்களிற்கு வழங்குகின்றது. அத்துடன், விரைவாக பல இடங்களில் தொடர்பு கொண்டு ஒப்பீடுகளினையும் மேற்கொள்வதற்கும் வசதியளிக்கின்றது.

* சில சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் வர்த்தகமானது பொருட்கள், சேவைகளினை விரைவாக வழங்குகின்றது.

* இலத்திரனியல் வர்த்தகத்தில் வாடிக்கையாளர்கள் தங்களிடத்திலிருந்து எந்த நேரத்திலும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு கட்டளையிட முடியும்.

* வாடிக்கையாளர்கள் பொருத்தமானதும் விபரமானதுமான தகவலினைச் சில விநாடிகளில் பெறமுடியும். பலநாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

* இலத்திரனியல் வர்த்தகமானது ஒரு வாடிக்கையாளர் மற்ற வாடிக்கையாளருடன் இலத்திரனியல் சமூகத்தில் ஒருவரோடு மற்றவர் கருத்துக்களினைப் பரிமாற்றிக் கொள்வதற்கும் தமது அனுபவங்களினை ஒப்பீடு செய்வதற்கும் வசதியளிக்கின்றது.

### 3.2 சமூகத்துக்கான நன்மைகள்

* இலத்திரனியல் வர்த்தகமானது பல தனிப்பட்டவர்களினை வீட்டிலிருந்தபடியே வேலை செய்ய வசதியளிப்பதினால் மிகக்குறைவான பயணங்களுக்கு அனுமதிக்கின்றது. இதனால் வீதிகளில் வாகன நெரிசல் குறைவாகக் காணப்படுவதுடன் காற்று மாசடைவதும் மிகக் குறைவாகக் காணப்படும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது சில வியாபாரிகளுக்கு தமது பொருட்களினை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு அனுமதியளிப்பதால், குறைவான பணவலுவுடைய மக்கள் கூடுதலாக இப்பொருட்களினை வாங்கித் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்.

* இலத்திரனியல் வர்த்தகமானது மூன்றாம் உலக நாடுகளிலும் கிராமப் பகுதிகளிலும் இருக்கும் மக்கள் பொருட்கள் சேவைகளினை அனுபவிப்பதற்கு வசதியளிக்கின்றது. உயர்தகைமை பற்றிக் கற்பதற்கும், கல்லூரி பட்டங்களினை பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்களினை இலத்திரனியல் வர்த்தகம் வழங்குகின்றது.

* இலத்திரனியல் வர்த்தகமானது பொதுச் சேவைகள் வழங்கலுக்கான வசதியினை கொடுக்கின்றது. இது செலவினைக் குறைத்து தரத்தினை அதிகரிக்கும்.

### 4. 0 இலத்திரனியல் வர்த்தகத்தின் வகைகள்

இலத்திரனியல் வர்த்தகத்தின் பல சாத்தியமான பிரயோகங்கள், நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கிடையேயும், வியாபாரிகளுக்கிடையேயும் காணப்படுகின்றன. எது எவ்வாறாயினும், இலத்திரனியல் வர்த்தகப் பிரயோகங்களின் தனிப்பட்ட பொதுவான வகைகளாக மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. அவை நிறுவனங்களுக்கிடையேயானவை. இதனை நிறுவனத்திற்கு நிறுவனம் எனவும் நிறுவனத்திற்குள்ளேயானவை, நிறுவனத்திலிருந்து நுகர்வோர்களுக்குரியவை எனவும் வரையறுக்கலாம்.

## நிறுவனங்களுக்கிடையிலான இலத்திரனியல் வர்த்தகம்

இந்தப்பார்வையில் இலத்திரனியல் வர்த்தகமானது பின்வரும் வியாபார பிரயோகங்களுக்கு வசதியளிக்கின்றது.

* வழங்குனர் முகாமைத்துவம்

இலத்திரனியல் பிரயோகமான கம்பனிக்கு வழங்குனர்களின் எண்ணிக்கை

யினைக் குறைப்பதற்கும் கொள்வனவு கட்டளைகள், நிரற்படுத்தல் செலவு, சுழற்சி நேரங்கள் போன்றவற்றினைக் குறைப்பதற்கும் வசதியளிக்கின்றது.

* இருப்பு முகாமைத்துவம்

இலத்திரனியல் பிரயோகமான கட்டளை சுழற்சியினைச் சுருக்குகின்றது. ஒரு நிறுவனத்தின் பங்காளர்களில் பலர் இலத்திரனியல் மூலமாக இணைந்திருப்பதால் தொலைநகல் அல்லது அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட தகவலானது உடனடியாக மாற்றீடு செய்யப்படுகின்றது. இது இருப்பு மட்டங்களினை குறைப்பதற்கும், இருப்பு சுழற்சியினை முன்னேற்றுவதற்கும், இருப்பின்மையினை நீக்குவதற்கும் உதவுகின்றது.

## 5.0 முடிவுரை

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வர்த்தகம் பெற்றுக்கொண்ட நன்மைகள் அளப்பரியனவாகும். இலத்திரனியல் வர்த்தகமானது 21ஆம் நூற்றாண்டில் நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவுகளை விரைவாகவும் அதிகமாகவும் வளர்க்க உதவும் என்பதில் சந்தேகம் இல்லை. நவீன அடிப்படையிலான வர்த்தகம் சர்வதேச வர்த்தகத்தில் பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தி வருவதனால் உலக மக்கள் இலத்திரனியல் வர்த்தகத்தின் மீது அதிக நாட்டத்தை செலுத்துவதாக கூற முடியும்.

***பேராசிரியர் க.தேவராஜா***
*முன்னாள் பீடாதிபதி*
*முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்*
*யாழ் பல்கலைக்கழகம்*

## References :

01. STAIR.K(2002), PRINCIPLES OF INFORMATION SYSTEM, 4th Ed., Houghton, Mifflin company, Geneva.

02. PRATT.R., (2001),DATABASE MANAGEMENT, 4th Ed., Boston Poos, England.

03. TITTEL.S., (2001), GUIDE TO/NET WORKING, 2nd Ed., Home wood,III, Irwin.

04. SCHNEIDER.M., (2001), ECOMMERCE, 2nd Ed., Prentice - Hall Publishing Co., U.S.A

05. LOSHIN.P ., (1999, E.COMMERCE ON - LINE ORDERING, 3rd Ed., Mc - Graw - Hall, New York, U.S.A

06. EFFOZ.S., (2003),MANAGEMENT INFORMATION SYSTEM, 3rd Ed., Academy of Management Publishers,U.K.

# கிரிபண்டாவின் பகிடிகள்
## Jokes of my friend KIRIBANDA

இலங்கை வங்கி மாத்தளைக்கிளையில் 1972 இலிருந்து 1976 வரை நான் வேலை செய்த காலப்பகுதியில் புதிதாக வேலைக்கு இணைந்த நண்பன் கிரிபண்டாவின் சிரிப்புக்குரிய பேச்சுக்கள் நடத்தைகள் பல இன்னும் நான் தனியே இருந்து சிரிக்கும் அளவிற்கு என் மனதில் பதிந்துள்ளன. இதனை நான் இம் மலரிலும் அதனைத் தொடர்ந்து வரும் மலர்களிலும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விருப்புகின்றேன்.

**முதல் நாள் -**

சாகரசேகர கெதர எனும் சிற்றூழியர் (நான் INQUARY counter இல் எனது வேலைகள் ஆரம்பிக்க ஆயத்தம் பண்ணிக் கொண்டிருந்தபோது) என்னிடம் வந்து ஒரு நபர் appointment letter உடன் வெளியில் காத்திருக்கிறார். கதவை திறந்து அவரை மட்டும் உள்ளே விடவா? என கேட்டார்.

நானும் தகவலை அப்பொழுது manager ஆக இருந்த வரும் எனது குருவுமாகிய திரு. K.சிவகணநாதனிடம் கூறி அவரது அனுமதியுடன் கண்ணாடி அடைப்பினால் ஆன CUBICLE க்கு அனுப்பி வைத்தேன். அப்பொழுது நேரம் 8.30 இருக்கும். (அக்காலத்தில் வாடிக்கையாள ருக்காக வங்கி திறப்பது 9.00 மணிக்கு) அப்போது தான் அந்த **அதிர்ச்சியான நிகழ்வு நடந்தது.**

உள்ளுக்கு போன கிரிபண்டாவைக் காணவில்லை ஆனால் மேசை கதிரை என்பன உடைபடுவது போல சத்தம் கேட்டது. முகாமையாளரோ மிகவும் படபடப்புடன் எழுந்து நின்று எங்களது உதவியை நாடுவது போல இருந்தது.

**நடந்தது இதுதான்** கிரிபண்டா வெற்றிலைக் கூற்றுடன் வந்து முகாமையாளர் தனது வேலையில் மூழ்கியிருந்தபோது அவர் எதிர்பாராவேளையில் திடீரென அவரது கால்களில் வீழ்ந்து வணங்கியுள்ளார். இதனால் திகிலடைந்த திரு.சிவகணநாதன் தனக்கு எதிர்பாராத தாக்குதல் நடாத்தப்படுவதாக எண்ணி பயந்துவிட்டார்.

ஊழியர்களாகிய நாம் அனைவரும் உள்ளே சென்று பார்த்த பொழுதுதான் நிலமை புரிந்தது. ஒருவாறு எல்லோரும் தம்மை சுதாகரித்துக் கொண்டு சாஸ்டாங்கமாக வெற்றிலைகளுடன் கிடந்த கிரிபண்டாவை எழுப்பி வைத்தோம். அதன் பின்னரே அவர் தனது appointment letter ஐ முகாமையாளரிடம் கொடுத்தார்.

இவ்வாறு முதல்நாளே எம்மையெல்லாம் சிரிப்புக்கும் சிந்தனைக்கும் உள்ளாக்கிய கிரிபண்டாவின் பல பகிடிகளை எதிர்வரும் மலர்களில் பார்க்கலாம், சிரிக்கலாம்,

**ந.சிவரத்தினம்**
**ஓய்வுநிலை உதவிப்பொது**
**முகாமையாளர்.**




# இறக்கி ஏற்றல் வியாபாரம்
# Entrepot Trading

சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஒவ்வொரு நாடும் தத்தமது பொருளாதார கொள்கைகளுக்கேற்ப ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளுக்கு திட்டங்களை வகுத்து, கட்டுப்பாடுகளை விதித்து அல்லது சில வேளைகளில் தளர்த்தி செயற்படுத்தி வருகின்றன. அந்நியச் செலாவணியை ஈட்டும் வழிமுறைகளில் ஏற்றுமதி நடவடிக்கைகளை அதிகரிக்கச் செய்யவும், அதன் மூலம் அந்நிய செலவாணியை அதிகளவு பெற்றுக் கொள்ளவும் இலங்கை அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள், உத்திகள் அந்நிய செலவாணி கட்டுப்பாடுகளில் தளர்வுகள் என்று பல்வேறு வழி முறைகளைக் கையாளுகின்றது. இத்தகைய ஒரு அம்சமாகவே இறக்கி ஏற்றல் வியாபாரத் தையும் ஊக்குவிக்கு முகமாக இலங்கை அரசாங்கம் அதில் ஈடுபடுவோருக்கு பல சலுகைகளை வழங்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இறக்கி ஏற்றல் வியாபாரம் (சில வேளைகளில் களஞ்சியசாலை வியாபாரம் எனவும் குறிப்பிடப்படுகின்றது) என்பது பொருட்களை ஒரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்து அவற்றை இன்னொரு நாட்டிற்கு மீள ஏற்றுமதி செய்யும் போது அந்த நடவடிக்கைகளுக்காக எவ்வித சுங்கத்தீர்வைகளோ, வரிகளோ செலுத்தாமல் இருக்க வழங்கப்படும் ஒரு சலுகை அடிப்படை யிலான சர்வதேச வியாபார நடவடிக்கையாகும். மேலும் விளக்கமாகக் கூறினால் ஒரு நாட்டிலுள்ள இடைநிலை வியாபாரி ஒருவர், ஒரு நாட்டிலிருந்து தனக்குக் கிடைத்த ஏற்றுமதிக் கட்டளைக்கு பொருட்களை வழங்குவதற்காக, இன்னொரு நாட்டில் உள்ள வழங்குநர் ஒருவரைக் கண்டு பிடித்து அவரிடமிருந்து பொருட்களை இறக்குமதி செய்து அதன் மூலம் தனது ஏற்றுமதிக் கட்டளையை நிறைவேற்றுவதாகும். இங்கு இறக்குமதிக்கோ, அல்லது ஏற்றுமதிக்கோ எவ்வித தீர்வைகளும், வரிகளும் அறவிடப்படமாட்டாது. இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் பொருட்கள் இறக்குமதியாளரினால் வெளியே எடுக்கப்படாமல் துறைமுகம் அல்லது விமானநிலையத்தினுள் வைத்து அல்லது சுங்கப் பகுதியினரின் இணைந்த களஞ்சிய சாலையில் (customs bonded ware house) வைத்து மீள ஏற்றுமதி செய்யப்படும். இந்நடவடிக்கைகளில் குறைந்த விலையில் இறக்குமதி மூலம் பொருட்கள் வாங்கப்பட்டு கூடிய விலையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இடைநிலை வியாபாரி தான் கொள்வனவு செய்யும் பொருட்களின் விலை, அவற்றிற்கான இறக்குமதிச் செலவு, பெறுமதி கூட்டல்செலவு (ஏதும் இருப்பின் ) தனது இலாபம் என்பவற்றைக் கணக்கிலெடுத்து தனது ஏற்றுமதி விலையைத் தீர்மானித்துக் கொள்ளமுடியும்.

## Entrepot Trade Operations



இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் இடைநிலை வியாபாரியினால் இரண்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று அவரிடம் பொருட்களை வாங்கும் கொள்வனவாளருடன் விற்பனை ஒப்பந்தம். மற்றது தனக்கு பொருட்களை வழங்கும் வழங்குநருடன் கொள்வனவு ஒப்பந்தம். கொள்வனவு ஒப்பந்தத்தின்படி வழங்குநர் பொருட்களைக் கப்பலேற்றி விட்டு அவர்களிற்கிடையிலான ஏற்பாட்டின்படி ஆவணங்களை இடைநிலை வியாபாரியின் வங்கிக்கு அனுப்பி வைப்பார். வங்கி அதுபற்றி இடைநிலை வியாபாரிக்கு அறிவிக்கும். அதேவேளை வியாபாரி கோரிய பொருட்கள் அவரது நாட்டிற்கு அனுப்பப்பட்டு அங்குள்ள துறைமுகம் அல்லது விமான நிலையம் அல்லது சுங்கப்பகுதியினரின் களஞ்சியசாலைகளில் வைக்கப்படும். பொருட்கள் வெளியே கொண்டு செல்லப்படுவதில்லை. இடைநிலை வியாபாரி தனது கொள்வனவாளரின் தேவைக்கேற்ப சில வேளைகளில் பொருட்களில் சில மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அதாவது பொருட்களை மீளப் பொதியிடல், மீளப் பெயரிடல் (Repacking and Relabeling) போன்ற சிறு மாற்றங்கள் செய்ய முடியும் இது பெறுமதி கூட்டுதல் (Value addition) எனப்படுகின்றது. இதன் பின்னர் இடைநிலை வியாபாரியின் விற்பனை ஒப்பந்தப்படி பொருட்கள் அவரது கொள்வனவாளருக்கு மீள ஏற்றுமதி செய்யப்படும். இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படாமல் நேரடியாக இடைநிலை வியாபாரியின் கொள்வனவாளரின் நாட்டிற்கு அனுப்பப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது இங்கு குறிப்பிடக்கூடியது. மீள ஏற்றுமதியின் பின்பு இடைநிலை வியாபாரி தனது பெறுமதி கூடிய ஆவணங்களை (விலைப்பட்டியல்,உண்டியல் போன்றவை) தனது வங்கியிடம் சமர்ப்பித்து முன்பு தனது வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட இறக்குமதி ஆவணங்களுக்கு பிரதியீடு செய்து (substitute) தனது கொள்வனவாளரின் வங்கிக்கு அனுப்பி வைக்கும்படி பணிப்புரை விடுப்பார். இவ் ஏற்றுமதியிலிருந்து பெறப்படும் நிதியிலிருந்து இடைநிலை வியாபாரியின் இறக்குமதிக்கான தொகை செலுத்தப்பட்ட பின்னர் மிகுதி இடைநிலை வியாபாரிக்கு வழங்கப்படும்.

இந்நடவடிக்கைகள் குறுகிய கால இடைவெளியில் நிறைவேற்றப்படக்கூடியதாக இடைநிலை வியாபாரி பார்த்துக் கொள்ள வேண்டும். இரண்டு ஒப்பந்தங்களுக்குமான அதாவது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி என்பவற்றிற்கான தீர்ப்பனவு காலம் (settlement period) அவர்களிற்கிடையிலான கொடுப்பனவு முறையிலேயே (payment method) தங்கியிருக்கும். தேவையான சந்தர்ப்பங்களில் வங்கிகள் குறுங்கால நிதி வசதிகளை வழங்கி இடைநிலை வியாபாரிக்கு உதவுகின்றன. நாணயக்கடித முறை மூலம் இறக்குமதி, ஏற்றுமதி இடம் பெறுமாயின் வங்கிகள் பின்னுக்குப் பின்னரான/ ஆதார நாணயக் கடிதங்களை (BACK TO BACK LETTER OF CREDIT) வழங்கி இடைநிலை வியாபாரிக்கு உதவி செய்யலாம். இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் பொருட்கள் இடைநிலை வியாபாரியின் நாட்டிலிருந்தே அவரது கொள்வன வாளருக்கு வழங்கப்பட்டதாக செயற்பாடுகள் அமைந்திருக்கும். உலகலாவிய ரீதியில் நோக்கும் போது சிங்கப்பூர், ஹொங்கோங், டுபாய் போன்ற நாடுகளில் உள்ள துறைமுகங்கள் இறக்கி ஏற்றல் வியாபாரத்திற்கு அதிகம் புகழ் பெற்றவையாக உள்ளன எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## இறக்கி ஏற்றல் வியாபாரம் சம்பந்தமாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள்:-

1. (அ) இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் 3 வது நாட்டிற்கு மீள ஏற்றுமதி செய்யப்படும் வரை துறைமுக அதிகார சபையின் சுங்கப் பகுதியினரின் இணைந்த களஞ்சிய சாலைகளில் (Customs Bonded ware house) களஞ்சியப்படுத்தி வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) 3 வது நாட்டிற்கு பொருட்கள் மீள ஏற்றுமதி செய்ய முன்னர் பொருட்களில் ஏதாவது திரும்பப் பொதியிடல், மீளப் பெயரிடல், சிறிய தயார்படுத்தல்கள் அல்லது மாற்றங்கள் போன்றவை செய்யப்படவேண்டியிருப்பின் அவை சுங்கப்பகுதியினரின் களஞ்சிய சாலைகளில் வைத்தே செய்யப்பட்டல் வேண்டும்.

(இ) வியாபாரத்தில் ஈடுபடுபவரின் நாட்டிற்கு (இலங்கைக்கு) பொருட்கள் கொண்டு வரப்படாமல் 2 வது நாட்டிலிருந்து 3 வது நாட்டிற்கு நேரடியாகப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படலாம்.

(ஈ) பொருட்கள் சுங்கப்பகுதியினரின் களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்லப்படாமல் துறைமுகத்தில் ஒரு கப்பலில் இருந்து இன்னொரு கப்பலிற்கு அல்லது விமானநிலையத்தில் ஒரு விமானத்திலிருந்து இன்னொரு விமானத்திற்கு மாற்றி ஏற்றப்படலாம்.

2. கீழ்வரும் பொருட்கள் இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் தடைசெய்யப்பட்டுள்ளன.

i ஆயுதங்கள், வெடி மருந்துகள்

ii போதைப் பொருட்கள்

iii சர்வதேச மரபுகளின்படி (International conventions) இறக்குமதி ஏற்றுமதிக்கு தடை செய்யப்பட்டு இலங்கையாலும் ஒத்துக் கொள்ளப்பட்ட பொருட்கள்.

iv கராம்பு- முன்னுரிமை வியாபார ஒழுங்குகளைக் (Preferential Trade agreement) கொண்ட நாடுகளுக்கும், புடவை மற்றும் ஆடைகள் - அமெரிக்கா,கனடா, இந்தியா, ஐரோப்பிய நாடுகளுக்கும் மீள ஏற்றுமதி செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

3. இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் மீள ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களிற்கான கொடுப்பனவுகள் கீழ் வரும் முறைகளில் பந்தி 4 இல் கீழே குறிப்பிட்டவாறு இடம் பெறலாம்.

i. நாணயக் கடிதம் (L/C)

ii. கொடுப்பனவுக்கு எதிரான ஆவணங்கள் (D/P)

iii. ஏற்றுக்கொள்ளலுக்கு எதிரான ஆவணங்கள் (D/A)

iv. முற்கொடுப்பனவு - advance payment

v. திறந்த கணக்கு - open account

4. (அ) இறக்கி ஏற்றல் வியாபாரத்திற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களிற்கான கொடுப்பனவு மீள ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களிற்கான பெறுவனவை விட குறைவான தாக இருக்க வேண்டும். இதன் மூலம் இவ்வியாரத்தில் ஈடுபடும் இடைநிலை வியாபாரி தனது பெறுமதி கூட்டுதல் செலவு, துறைமுக, களஞ்சியசாலை கட்டணங்கள், வங்கிக் கட்டணங்கள் போன்றவற்றை ஈடு செய்து தான் இலாபம் ஈட்டும் தன்மையை உறுதி செய்து கொள்ள முடியும்.

(ஆ) முற்கொடுப்பனவு மூலம் இறக்குமதிக்கு பணம் அனுப்புவதாயின் அந்நிய செலவாணி ஈட்டுவோர் கணக்கில் (Foreign Exchange Earners Account ) உள்ள நிதியில் இருந்தே அனுப்பப்படல் வேண்டும்.

(இ) திறந்த கணக்கு முறை மூலம் அனுப்பப்படும் கொடுப்பனவு இறக்குமதிக் கப்பல் பத்திரம் அல்லது விமான வழிப்பத்திரத்தில் உள்ள கப்பலேற்றல் திகதியிலிருந்து 365 நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும்.

5 . மீள ஏற்றுமதிக்கான கொடுப்பனவு பெறப்படும் முறை பின்வரும் வழிகளில் இருக்கலாம்.

i. முற்கொடுப்பனவு
ii. நாணயக்கடிதம்
iii. கொடுப்பனவிற்கு எதிரான ஆவணங்கள்.
iv. ஏற்றுக் கொள்ளலுக்கு எதிரான ஆவணங்கள் ஆகக்கூடியதாக 120 நாட்கள் வரை.

## இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் இலங்கை சுங்கத்திணைக்களத்தின் செயற்பாடுகள் :-

1. இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் ஈடுபடுவோர் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். மீள ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் சம்பந்தமான விபரம், அதன் பெறுமதி, கப்பல்பத்திர இலக்கம், கப்பலின் பெயர் கொடுப்பனவு முறை போன்ற விபரங்கள் விண்ணப்பப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட வேண்டும். சுங்கத்திணைக்களத்தின் முறிகள் பகுதியினால் (Bonds Division) அனுமதி வழங்கப்படும்.

2. இறக்குமதி, ஏற்றுமதி சம்பந்தமான சுங்க வெளிப்படுத்தல்கள் (CUSDEC= Customs Declaration) சுங்கத் திணைக்களத்தின் முறிகள் பகுதியிலேயே செயற்படுத்தப்படுகின்றன.

3. இறக்கி ஏற்றல் வியாபார நடவடிக்கை துறைமுகம் அல்லது விமான நிலையத்தினுள் வைத்து இடம் பெற்றால் தீர்வை, வரிகள் என்பவற்றிற்காக பொறுப்பு ஏதும் வியாபாரி கொடுக்கத் தேவையில்லை. துறைமுகம் அல்லது விமான நிலையத்திற்கு வெளியே பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு இறக்கி ஏற்றல் வியாபார நடவடிக்கை இடம் பெற்றால் தீர்வை, வரிகள் என்பவற்றிற்கு பொறுப்பாக வியாபாரியினால் வங்கி உத்தரவாதம் (Bank Guarantee) அல்லது கூட்டாண்மை உத்தரவாதம் (Corporate Guarantee) ஒன்று கொடுக்கப்பட வேண்டும். மீள ஏற்றுமதி இடம்பெற்று அதற்கான சான்று வழங்கப்பட்டவுடன் இவ் உத்தரவாதம் நீக்கப்படும்.

4. பொருட்கள் துறைமுகம் அல்லது விமான நிலையத்திற்கு வெளியே சுங்கப் பகுதியினரின் களஞ்சியசாலைகளில் வைப்பதற்காக எடுத்துச் செல்லப்படும் போது சுங்கப்பகுதியினரின் மேற்பார்வையின் கீழேயே எடுத்துச் செல்லப்பட்டு மீள ஏற்றுமதி செய்யப்படும்.

5. இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரி சுங்கத்திணைக்களத்திற்கான ஆவணங்களில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உண்மையான உற்பத்தி நாட்டை (country of origin) வெளிப்படுத்த வேண்டும்.

## இறக்கி ஏற்றல் வியாபார மூலம் கிடைக்கும் நன்மைகள்:-

(அ) இடைநிலை வியாபாரிக்கான நன்மைகள்.

i. ஒப்பீட்டளவில் இலகுவாக இலாபமீட்டக்கூடிய வியாபார மொன்றை இடைநிலை வியாபாரி செய்ய முடிகிறது.

ii. அந்நிய செலவாணியை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.
iii. இடைநிலை வியாபாரி தனது வளங்களை அதிகம் பயன்படுத்தத் தேவையில்லை.
iv. குறுகிய காலத்தில் இலாபமீட்டக்கூடிய வியாபாரமாக அமைகின்றது.
v. கொள்வனவு, விற்பனை இரண்டையும் வங்கிகளினூடாக நாணயக் கடித முறையில் மேற்கொண்டால் இடர்கள் தவிர்க்கப்படலாம்.
vi. இடைநிலை வியாபாரி தேவையான ஆவணங்கள் முழுவதையும் தயார்படுத்தத தேவையில்லை.
vii. துறைமுகம், விமான நிலையம் அல்லது களஞ்சிய சாலைகளில் பொருட்கள் வைக்கப்பட்டு மீள ஏற்றுமதி செய்யப்படும் வரை சலுகை அடிப்படையில் கட்டண வசதிகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) நாட்டிற்கான நன்மைகள்:-

i. அந்நிய செலவாணி இலகுவாக அதிகம் பெறப்படுகின்றது.
ii. கப்பல்துறை, விமானத்துறை, களஞ்சியசாலைகள், அரச, தனியார் துறைகளின் சேவை வழங்குநர்களுக்கு (service providers) மேலதிக வருமானங்கள் கிடைக்கின்றன.
iii. நாட்டின் ஏற்றுமதியாக கணிக்கப்படுவதால் புள்ளி விபரங்களில் நாட்டின் ஏற்றுமதித் தொகை அதிகரித்துக் காணப்படும்.
iv. நாட்டின் ஏற்றுமதியாகக் கணிக்கப்படுவதால் நல்லதொரு வியாபார நிலையம் என்ற பிரதிமை (Image) நல்லெண்ணம் என்பன ஏற்படுகின்றன. இதனால் பூகோள ரீதியில் சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்து தேசிய வருமானத்தை அதிகரிக்க முடிகின்றது.

## இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் ஏற்படக்கூடிய தீமைகள்

i இறக்கி ஏற்றல் வியாபாரத்தில் இரண்டு ஒப்பந்தங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பதால் ஏதாவது காலதாமதம் கப்பலேற்றல் தாமதம், அல்லது கப்பலேற்றாது விடல், ஆவணங்களில் குறைபாடுகள் ஏற்பட்டால் வியாபாரத்தில் பாதிப்பு ஏற்படும்.
ii. ஆவண இடர்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.
iii. ஏதாவது ஆவணங்களில் உண்மையான வழங்குநரின் விபரங்கள் காட்டப்பட்டு அதை கொள்வனவாளர் தெரிந்து கொண்டால் இடைநிலை வியாபாரியின் வியாபாரம் பாதிப்படையும்.

## இறக்கி ஏற்றல் வியாபாரத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் வசதிகள்/ ஊக்குவிப்புக்கள்:-

i. இலங்கை ஊடாகவோ அல்லது நேரடியாகவோ ஒரு 3 வது நாட்டிற்கு பொருட்கள் அனுப்பப்படும் போது இறக்கி ஏற்றல் வியாபாரத்தை ஊக்குவிக்குமுகமாக நாணயக் கட்டுப்பாட்டாளரினால் நாணய மாற்று விதிகள் தளர்த்தி வழங்கப்பட்டுள்ளன.
ii. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சலுகை அடிப்படையில் களஞ்சிய சாலைக் கட்டணங்கள், மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு (21 நாட்கள்) இலவச வசதி போன்றவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன.
iii. பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள், எரிவாயு போன்ற குறிப்பிட்ட சில வகைப் பொருட்களுக்கு கூடிய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

iv. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமான சரக்கு இறங்கு துறை (Air cargo Terminal), கொழும்பு துறைமுக அதிகாரசபை ஆகியவற்றால் களஞ்சியசாலை வசதிகள் அதிகரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

v. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மூலம் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் ஒழுங்கு செய்தலும், சிறு கையேடுகள்,ஆலோசனை சேவைகள் வழங்குதல் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வியாபாரத்தை அதிகரிக்கச் செய்தல்.

இறக்கி ஏற்றல் வர்த்தகத்தில் சிக்கலான சுங்கச் செயற்பாடுகள் இல்லாதிருப்பதும், தீர்வைகள் வரிகள் விதிக்கப்படாமல் இருப்பதும் இறக்குமதியும் மீள ஏற்றுமதியும் சிரமங்கள் எதனையும் அதிகமாகக் கொண்டிராமல் இருப்பதும் இவ் வர்த்தகத்தை மென் மேலும் அதிகரிக்க வர்த்தகர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பென்றே கூற வேண்டும். இறக்கி ஏற்றல் வர்த்தகத்தில் தனி நபர்களோ, பங்குடைமைகளோ, கம்பனிகளோ ஈடுபட்டு அதிகம் இலாபம் ஈட்டமுடியும்.

ஆக்கம்
தி.ஜேசுதாசன் AIB
இளைப்பாறிய சிரேஷ்ட முகாமையாளர்
இலங்கை வங்கி


By:-
T.JESUTHASAN AIB.
RETIRED SENIOR MANAGER
BANK OF CEYLON

கட்டுரையாளர் இலங்கை வங்கியின் இறக்குமதி, ஏற்றுமதி, மற்றும் கடல் கடந்த வங்கிச் சேவை போன்ற பிரிவுகளில் பணியாற்றி 30 வருடங்களுக்கு மேலாக சர்வதேச வங்கியியல் நடவடிக்கைகளில் அனுபவம் கொண்டவர். இலங்கை வங்கியின் ஊழியர் பயிற்சி நிலையம், இலங்கை வங்கியாளர் நிறுவனம், இலங்கை மத்திய வங்கியின் வட பிராந்திய காரியாலயம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்களில் வளவாளராகவும், விரிவுரையாளராகவும், பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.

**தொடர்புகளுக்கு :**
**கையடக்கத் தொலைபேசி : 0773746600**
**மின்னஞ்சல் :** jesuthas5@gmail .com



# Person beyond reform - Harilal Gandhi



My dear son Harilal, I have read that recently in Madras, policemen found you misbehaving in a state of drunkenness at midnight in an open street and took you into custody.

Next day you were produced before a bench of magistrates and they fined you one rupee...

Even the magistrates showed regard for your father in thus giving you only nominal punishment.

Now you are making my very existence very impossible. Think of the misery you are causing to your aged parents in the evening of their lives. Though born as our son you are indeed behaving like an enemy.

I am a frail old woman unable to stand the anguish you are causing. You are my eldest son and now fifty years old. I am even afraid of approaching you lest you humiliate me. Your daughters and son - in -law also bear with increasing difficulty, the burden of sorrow your conduct has imposed upon them"

Kasturba

A Grief - striken mother Kasturba Gandhi wrote to their son Harilal, who was their apple of eye. Mahatma Gandhi and wife Kasturba were gifted with four sons. Gandhi, the Barrister - at -Law, ascetic, wily politician, crusader and freedom fighter miserably failed to groom a family successor to carry forward his message to the future generations. None of his four sons Harilal, Manilal, Ramadas and Davadas were given a formal education despite their father being a learned man; Gandhi had a peculiar philosophy of education which denied his children the formal schooling. By education he meant, SADACHARKI SHIKSHA, the character building - no high or professional careers such as lawyers, doctors, engineers. Highly ambitious Harilal wanted to go to

England and qualify as a Barrister - at-Law and follow in the steps of his great father. When Harilal pleaded with his father to finance his education in England the latter rejected it outright. Instead he sent his two cousins Maganlal and Chaganlal to England for higher education. When Harilal found his utopia crumbling before his own eyes, his inner trauma rebelled against his father, who was a no - nonsense task master to his siblings since their formative years. Frustrated and embittered in his prime of life as early as 18, the angry son changed his ancestral faith, Hinduism and embraced Islam and got married to a muslim woman named Gulab -nick named "chinchi" by her father - in law. Released from the clutches of an ascetic father the rebellious on stepped into the world of joy and happiness. Frolics of his three children - son, Kanthi and two daughters Ramibehn and Manibehn were a source of exhilaration and enjoyment. His hindu nephews who never forgave his conversion to Islam humiliated him. "Harilal Kaka". Reflecting on his somber past, Harilal once remarked, "the curse of illiteracy had just two avenues to junior Ghandis. Either they must become Bupu's disciples or sell salt in paper packets that carry Bapu's photographs'. Harilal accused his "sarvajanaik father', the " Heartless ring master who exploited his family members to serve his own ends".

Harilal's Brother too suffered the rigours of their father. When he came to know that his son Manilal was involved with a married Hindu woman knowing no bounds to his rage, Gandhi coerced the woman to shave her hair and pledged he would never allow his son to have his way. Manilal's subsequent love affair with a muslim woman named Fatima turned out to be stillborn one in the presence of his father's overpowering personality.

Misfortune struck Harilal when his beloved wife Gulab died of flu epidemic. When he tried to contract a second marriage Gandhi castigated him. Harilal's father who married at the very tender age of 13 and practised continence at 37. Miserably failed to understand the man's primeval urge for lust. The yawning abyss in the relations between father and son turned sour and narrower. When once a train that carried Gandhi and Kasturba stopped at a station a feeble voice broke in, "Kasturba kijai" instead of ubiquitous " Gandi ki jai". Harilal in rags and with teeth gone approached and offered an orange to his mother Kasturba.When Gandhi asked What did he bring him, Harilal exploded in to toothless anger and said, "If you are so great, it is because of Bar (Mother)".

Nilam Parikh, Harilal's surviving granddaughter who prefers Gandhi and Gandhi, but disowns Gandhi Vs. Gandhi has her own version of father - son tragedy.

"The pain Harilal inflicted on his parents and children by his drinking, womanizing and his much publicized (if short - lived) "stunt" of converting to Islam was due to his being misguided by Gandhi's many enemies. "Hariilal went looking for a father but always found Mahatma instead" Parikh reiterated. When mother Kasturba was fatally ill, Harilal arrived but could not talk to her as he was fully drunk. His presence at his great father's funeral went unnoticed. Gandhi died on January 30,1948 at the Hands of an assassin.

End came to Harilal on June 18,1948 in Shivari Tuberculosis Hospital in Bombay with his two daughters and son in law by his bedside, as sheela Reddy says.

Harilal's last words, "I am not a person who can be reformed. Tell Kanthi (son) to pardon me."

K.D.M. Kittanpahuwa
Sunday Observer

# வாழ்க்கையின் உண்மை

ஒருவனுக்கு நான்கு மனைவிகள் இருந்தார்கள்.
ஆனால் அவன் தனது நான்காவது மனைவியை மட்டும் மிக அதிகமாக நேசித்தான்.
அந்த மனைவியின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றினான்.
அவளுக்கு தேவையானதை எல்லாம் செய்துகொடுத்தான்.
அவன் தனது மூன்றாவது மனைவியைக்கூட நேசித்தான்.
ஆனால் அவளை தனது நண்பர்களுக்கு முன்னால் காட்டிக்கொள்ள பயந்தான்.
பிறரோடு ஓடி விடுவாளோ என்று பயந்தான்.
அவன் தனது இரண்டாவது மனைவியையும் நேசித்தான்.
ஆனால் தனக்கு பிரச்சினைகள் வரும்போது மட்டும் அவளிடம் போவான்.
அவளும் அவனுடைய பிரச்சினைகளில் உதவினாள்.
ஆனால் அவன் ஒருபோதும் தனது முதல்மனைவியை நேசிக்கவே இல்லை. ஆனால் அவளோ அவன்மீது மிகவும் நேசம் வைத்திருந்தாள். அவனது எல்லா தேவைகளையும் அவள் கவனித்து கொண்டாள்.
ஒருநாள்...
அவன் மரணப்படுக்கையில் விழுந்தான். தான் இறக்கப்போவதை உணர்ந்துவிட்டான். தான் இறந்த பின் தன்னுடன் இருக்க ஒரு மனைவியை விரும்பினான்.
எனவே தன்னுடன் சாக யார் தயாராய் இருக்கிறார்கள் என அறிந்துகொள்ள விரும்பினான். தான் அதிகம் நேசித்த நான்காவது மனைவியை அழைத்தான்.
அவளோ அதிரடியாக மறுத்துவிட்டு அவனை விட்டு நீங்கினாள். அவன் தனது மூன்றாவது மனைவியை அழைத்தான்.
அவளோ நீயோ சாகப்போகிறாய்.
நான் வேறு ஒருவருடன் போகப்போகிறேன் என்று கூறிவிட்டு சென்றுவிட்டாள். பிறகு தனது இரண்டாவது மனைவியை அழைத்துக் கேட்டான்.
அவளும் மன்னிக்கவும் என்னால் உன் கல்லறைவரைக்கும் கூட வரமுடியும். கடைசி வரை உன்னுடன் வரமுடியாது என்று மறுத்துவிட்டாள்.
நொந்துபோன அவன் இதயம் தளர்ந்து போனது. அப்போது தான் அவனது முதல் மனைவியின் குரல் ஒலித்தது. ‘‘
நீ எங்கே போனாலும் நான் உன்னுடனே இருப்பேன்.
உன்னுடன் நான் கண்டிப்பாக வருவேன் ’’ என்று சொன்னாள். ஆனால் அவளோ எலும்பும் தோலுமாக சாகும் தறுவாயில் இருந்தாள். காரணம் அவன் அவளை நன்கு கவனித்துக் கொள்ளாததுதான். அவன் வருந்தினான். நான் நன்றாக இருக்கும் போதே உன்னையும் சரியாகக் கவனித்திருக்கவேண்டும். தவறிவிட்டேன் என்று அழுதான். அந்த வருத்தத்திலேயே மரித்தும் போனான்.
உண்மையில் நாம் அனைவருக்குமே இந்த நான்கு மனைவியர் உண்டு.
1. நான்காவது மனைவி நமது உடம்பு.
நாம் என்னதான் வாழ்நாள் முழுக்க நன்றாகக் கவனித்துக் கொண்டாலும் கடைசியில் நம்முடன்

வரப்போவதில்லை.
நாம் இறந்ததும் அதுவும் அழிந்து போகிறது.
2. மூன்றாவது மனைவி நமது சொத்து சுகம்தான்.
நாம் மறைந்ததும் அவை வேறு யாருடனோ சென்றுவிடுகிறது.
3. நமது இரண்டாம் மனைவி என்பது நமது குடும்பம் மற்றும் நண்பர்கள்.
அவர்கள் நமது கல்லறை வரையில் தான் நம்முடன் கைகோர்ப்பார்கள்.
அதற்குமேல் நம்முடன் கூட வரப்போவதில்லை.
4. நாம் கவனிக்காமல் விட்ட முதல் மனைவி நமது ஆன்மா.
நாம் நன்றாக இருக்கும் போது நம்மால் கவனிக்கப்படாமல் நலிந்து சிதைந்து போய் இருந்தாலும் நம்முடன் இறுதி வரை கூட வரப்போவது நமது ஆன்மாதான்.

- இணையத்திலிருந்து

A person's true character is revealed
by what he does when no one else is watching.

In the confrontation between the stream and the rock the stream always wins -
not through strength
but through perseverance
- H. Jackson Brown

The heart is happiest when it beats for others

Expect nothing, live frugally on surprise
- Alice worker

# Conscious Parenting

In the movie "Taare Zameen Par", the art teacher tells the rude & cursing father of the dyslexic kid about "Solomon Islands", where the tribals don't cut down a tree. They surround the tree & curse it for hours every day. Within a few weeks, the tree dries up & dies.

Difficult to believe? How can intangible, invisible thoughts & words kill a tree?

If you read Bruce H. Lipton's THE BIOLOGY OF BELIEF, you will think a dozen times before saying something demoralizing to yourself or to the people you love.

In this book, Mr. Lipton details the power of conscious & subconscious mind.

The subconscious mind is million times more powerful than the conscious mind & decides most of the things in our lives according to the beliefs it has.

Many times we fail to change an unpleasant habit despite our will-power & conscious efforts. It is because the habit gets so strongly programmed in our subconscious mind that the efforts made by our conscious mind hardly make any difference.

Conscious Mind is just a shadow of our Unconscious Mind..

So, when the tribals of Solomon Islands curse a tree, they are actually installing negative & harmful beliefs in the tree's emotion (yes, trees have emotions).

Within few days, those negative emotions becomes a belief & eventually changes the molecular architecture of the tree & kill it from inside..

2500 years ago, when Buddha said 'You are what you think', actually he was telling a scientific fact which is now proved correct by Quantum Physics & Molecular Biology.

The book has a special chapter on Conscious Parenting where it talks about the beneficial & harmful effects of what parents say to their children..

If you are a parent and you keep cursing your child in the name of constructive criticism, you are installing beliefs in their mind which will keep harming them forever..

But if you keep appreciating them sincerely, you are installing beliefs in their mind which will help them in their entire life..

Also be careful of what you keep saying to yourself.

Repetition of words & thoughts is the best way to install a belief in your subconscious mind.

If you keep saying you are a loser, don't be surprised if you become a loser within a few months or years.

If your friends keep saying such things to you, there is no harm in saying a quick goodbye to them.

May be you value their friendship a lot. But you must value yourself more than such friendship.

Accept all people as they are. Love all people unconditionally ( later Hinduism adapted it as vasudeva kutumbakam).

Always keep saying to yourself I am healthy, wealthy, happy, successful & prosperous!

From
Internet

# Rules are not flexible but Bankers have to be

An old lady handed her cheque to a bank teller and said, “I would like to withdraw Rs.500..”

The female teller told her, “For withdrawals less than Rs.5,000, please use the ATM”.

The old lady then asked, “Why?” The teller irritably told her, “These are rules. Please leave if there is no other matter. There is a queue behind you.” She then returned the cheque to the old lady.

The old lady remained silent. But she returned the cheque to the teller and said, “Please help me withdraw all the money I have.”

The teller was astonished when she checked the account balance. She nodded her head, leaned down and said to the old lady, “My apologies Granny, you have Rs.3.5 billion in your account and our bank does not have so much cash currently. Could you make an appointment and come again tomorrow?"

The old lady then asked, “How much am I able to withdraw now?”

The teller told her, “Any amount up to Rs. 300,000.”

The old lady then told the teller that she wanted to withdraw Rs. 300,000 from her account. The teller did so quickly and handed it to the old lady respectfully. The old lady kept Rs. 500 in her bag and asked the teller to deposit the balance of Rs. 299,500 back into her account. The teller was dumbfounded.

The moral of this story is that rules are inflexible but we humans can be flexible when the situation requires us to be. We should not treat people based on their looks or how they are dressed. Rather, we should treat everyone with respect. And ... never be too quick to judge a book by its cover

# தமிழ்மொழி செம்மொழி

நம்ம மொழி செம்மொழி..!!
”அம்மா”.. மூன்றெழுத்து..!!
”அப்பா”.. மூன்றெழுத்து..!!
”தம்பி”.. மூன்றெழுத்து..!!
”தங்கை”.. மூன்றெழுத்து..!!
”மகன்”.. மூன்றெழுத்து..!!
”மகள்”.. மூன்றெழுத்து..!!
”காதலி”.. மூன்றெழுத்து..!!
”மனைவி”.. மூன்றெழுத்து..!!
”தாத்தா”.. மூன்றெழுத்து..!!
”பாட்டி”.. மூன்றெழுத்து..!!
”பேரன்”..மூன்றெழுத்து..!!
”பேத்தி”.. மூன்றெழுத்து..!!
இவை அனைத்தும்.. அடங்கிய..
”உறவு”.. மூன்றெழுத்து..!!
உறவில் மேம்படும்..
”பாசம்”.. மூன்றெழுத்து..!!
பாசத்தில் விளையும்..
”அன்பு”.. மூன்றெழுத்து..!!
அன்பில் வழியும்..
”காதல்”.. மூன்றெழுத்து..!!
காதலில் வரும்..
”வெற்றி”.. யும்
மூன்றெழுத்து..!!
”தோல்வி”..யும்
மூன்றெழுத்து..!!
”காதல்” தரும் வலியால் வரும்..
”வேதனை”.. மூன்றெழுத்து..!!
வேதனையின் உச்சகட்டதால்
வரும்..
”சாதல்”.. மூன்றெழுத்து..!!
சாதலில் பறிபோகும்..
”உயிர்”..மூன்றெழத்து..!!
இது நான் எழுதிய..
”கவிதை”.. என்றால்..
அதுவும் மூன்றெழுத்து..!
இது
”அருமை”.. என்றால்.. அதுவும்
மூன்றெழுத்து..!!
”மொக்கை”.. என்றால்..
அதுவும் மூன்றெழுத்து..!!
கமெண்ட்ஸ் எப்படி வருமோ..
என்ற
”கவலை”.. யும்
மூன்றெழுத்து..!
”நட்பு”.. என்ற மூன்றெழுத்தில்
இணைந்து படித்த..
அனைவருக்கும்
”நன்றி”.. என்பதும்
மூன்றெழுத்து..!!
”மூன்று”..உம்
மூன்றெழுத்தே..!!
இவை அனைத்தும் அடங்கிய..
“தமிழ்”.. உம் மூன்றெழுத்தே..!!
“வாழ்க”.. “தமிழ்”...!!

இணையத்திலிருந்து

# The 99 Club

Once upon a time, there lived a King who, despite his luxurious lifestyle, was not happy at all.

One day, the King came upon a servant who was singing happily while he worked. This fascinated the King; Why was he, the Supreme Ruler of the Land, unhappy and gloomy, while a lowly servant had so much joy?

The King asked the servant, 'Why are you so happy?'

The man replied, 'Your Majesty, I am nothing but a servant, but my family and I don't need too much - just a roof over our heads and warm food to fill our tummies.'

The king sought the advice of his most trusted advisor. After hearing the story, the advisor said, 'Your Majesty, the servant has not yet joined "The 99 Club".'

'The 99 Club? And what is that?' the King inquired.

The advisor replied, 'To truly know what The 99 Club is, just place 99 Gold coins in a bag and leave it at this servant's doorstep.'

When the servant saw the bag, he let out a great shout of joy... so many gold coins. He began to count them. After several counts, he was at last convinced that there were only 99 coins.

He wondered, 'What could've happened to that last gold coin? Surely, no one would leave 99 coins!'

He looked everywhere, but that final coin was elusive. Finally he decided that he was going to work harder than ever to earn that 100th gold coin.

From that day, the servant was a changed man. He was overworked, grumpy, and blamed his family for not helping him make that 100th gold coin.

And he had stopped singing while he worked.

Witnessing this drastic transformation, the King was puzzled. The advisor said, 'Your Majesty, the servant has now officially joined The 99 Club.'

He continued, 'The 99 Club is a name given to those people who have enough to be happy but are never content, because they're always wanting that extra 1, saying to themselves: "Let me get that one final thing and then I will be happy for life."

We can be happy with very little in our lives, but the minute we're given something bigger and better, we want more ...and even more! We lose our sleep, our happiness, as the price for our growing needs and desires.

That's "The 99 Club"...
Zero Membership fee to enter, but you pay for it with your entire life !!!

## இலங்கை வைத்தியரும் அமெரிக்க சட்டத்தரணியும்

இலங்கையிலிருந்து அமெரிக்கா சென்ற ஒரு வைத்தியர் அங்குள்ள பல வைத்தியசாலைகளில் வேலைவாய்ப்புப் பெற முயன்றும் அவரது முயற்சி பலிக்கவில்லை.

அதனால் அங்குள்ள வைத்தியசாலைகளை நம்பி இனிப்பயனில்லை என்று நினைத்து சொந்தமாக ஒரு தனியார் வைத்தியசாலையைத் தொடங்கினார். அந்தச் சிறிய கட்டிடத்துக்கு வெளியே பெரிதாக ஒரு அறித்தல் பலகையை மாட்டினார். அது கீழ்க்கண்டவாறு இருந்தது.

“இங்கே வைத்தியம் செய்து கொள்ளுங்கள். கட்டணம் எல்லா நோய்களுக்கும் 20 டொலர் மட்டுமே! ஆனால் இங்கே வைத்தியம் பார்த்தபின் உங்கள் நோய் குணமாகாவிட்டால் நாங்கள் உங்களுக்கு 100 டொலர் தருவோம்”.

இதைப்படித்த ஒரு அமெரிக்க சட்டத்தரணி மனதுக்குள் மகிழ்ந்தார். “ இதோ 100 டொலர் சம்பாதிக்கும் வாய்ப்பு தானாகவே தேடி வருகிறது. நான் ஏன் விடவேண்டும்? ” என்று எண்ணியபடி வைத்தியரிடம் சென்றார்.

“டாக்டர் என் நாக்கு ருசியை உணரும் தன்மையையும் என் மூக்கு வாசனையை உணரும் தன்மையையும் இழந்துவிட்டது. ஆகவே நான் உங்களிடம் வந்திருக்கிறேன்” “அது ஒரு பிரச்சினையும் இல்லை ஐயா!! பயப்படாதீர்கள்” என்று கூறிவிட்டு வைத்தியர் “நர்ஸ் அந்த 22 வது போத்தலில் இருக்கும் மருந்தில் மூன்று சொட்டு வீதம் இவர் நாக்கிலும், நாசியிலும் விடுங்கள்” நர்ஸ் மருந்தை விட வரும் போது திகைப்படைந்த சட்டத்தரணி “டாக்டர் இது மண்ணெண்ணெய் அல்லவா” என்று கூறினார்.

டாக்டர்: என் மருந்தை விடமுதலே உங்களுக்கு வாசனையும் ருசியும் தெரிந்துவிட்டது. எப்படி என் வைத்தியம் பார்த்தீர்களா? கவுண்டரில் 20 டொலர் செலுத்தி விட்டு பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆத்திரத்தை அடக்கிக் கொண்ட சட்டத்தரணி 20 டொலர் பணத்தைச் செலுத்தி விட்டுச் சென்றார்.

எப்படியும் தன்னுடைய 20 டொலரையும் மேலதிகமாக 100 டொலரையும் டாக்டரிடமிருந்து கறந்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்ட அவர் சில நாட்களில் மீண்டும் டாக்டரிடம் வந்தார்.

“எனக்கு சடுதியாக ஞாபகமறதி வந்துவிட்டது. நேற்று வரை நடந்த ஒன்றுமே என் நினைவில் வரவில்லை”

“ஒரு பிரச்சினையும் இல்லை, நர்ஸ்! அந்த 22ம் எண் போத்தலில் இருந்து சில சொட்டுக்களை எடுத்து இவரது தலையில் நன்றாகத் தேய்த்து விடுங்கள்”

சட்டத்தரணி :- டாக்டர் அந்தப் போத்தலில் இருப்பது மண்ணெண்ணெய் அல்லவா சென்றமுறை நான் உங்களிடம் வந்தபோது அதையே தானே தந்தீர்கள்.

டாக்டர் : கங்கிராஜலேசன்ஸ், இந்தக் கிளினிக்கில் காலடி வைத்த உடனே உங்கள் நோய் குணமாகிறது பார்த்தீர்களா? சென்ற வாரம் நடந்தது கூட உங்களுக்குத் தெளிவாக நினைவு வந்து விட்டது. 20 டொலர் கட்டணத்தைச் செலுத்தி விடுங்கள். நன்றி"

மனதுக்குள் குமுறிய சட்டத்தரணி வேறு வழியில்லாமல் பணத்தைச் செலுத்தி விட்டு எப்படியும் என் பணத்தை மேலதிகமாக உன்னிடம் கறந்து விடுகிறேன். என்று கறுவிக் கொண்டு சென்றார்.

சில நாட்கள் கழித்து மீண்டும் அவர் டாக்டரிடம் வந்தார். வரும் போதே தட்டுத் தடுமாறிக் கொண்டே வந்தார்.

டாக்டர்:- சார் உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது. இப்படித் தடுமாறுகிறீர்களே?

சட்டத்தரணி (கைகளால் துழாவிக்கொண்டே) டாக்டர் எங்கே இருக்கிறீர்கள்? எனக்கு சுத்தமாக பார்வைபோய்விட்டது. ஏதாவது செய்யுங்கள் பிளிஸ்!

டாக்டர் சற்று யோசித்து விட்டுச் சோகமாகச் சொன்னார்.

"மன்னிக்கவும் இதற்கு என்னிடம் மருந்தில்லை ஆகவே நாங்கள் ஒப்புக்கொண்டபடி 100 டொலர் தருகின்றோம். நீங்கள் வேறு எங்கும் போய் வைத்தியம் செய்து கொள்ளுங்கள்" அப்படி கூறிவிட்டு ஒரு நாணயத்தாளை சட்டத்தரணியின் கையில் வைத்தார். மகிழ்ந்த சட்டத்தரணி தாளைப் பார்த்து திடுக்கிட்டார்.

"டாக்டர் இது 20 டொலர் நோட் அல்லவா? 100 டொலர் இல்லையே?

"காங்கிராஜுலேசன்ஸ் நான் முன்பே கூற வில்லையா? இங்கே காலடி எடுத்து வைத்தாலே நோய்கள் குணமாகுமென்று. உங்களுக்குத் தெளிவான பார்வை வந்துவிட்டது." என்று கூறித் தான் கொடுத்த தாளை மீண்டும் வாங்கிக் கொண்டு நர்ஸிடம் சொன்னார். நர்ஸ்! இவரது பார்வைக்கோளாறு குணமாகியதால் இவரிடம் 20 டொலர் வாங்கிக்கொண்டு பற்றுச்சீட்டைக் கொடுத்து விடுங்கள், நன்றி ஐயா! இனி உங்கள் பார்வை சரியாகவே இருக்கும். அதுக்கு நாங்கள் உத்தரவாதம்,"

வேறு வழியின்றி மீண்டும் 20 டொலரை இழந்து விட்டு சட்டத்தரணி வெளியேறினார்.
இலங்கையரா கொக்காவா?

நீதி : அமெரிக்காவில் இப்படிச் செய்யலாம். இங்கு இலங்கையரிடம் இதை முயற்சித்தால் டாக்டருக்கு மூக்கு இருக்காது.

க. பாலசுப்பிரமணியம்
இளைப்பாறியஉதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கை வங்கி.


# Bank of Ceylon Jaffna District
# Pensioners'  Association
# 9th Annual General Meeting



Mr.Rasanayagam- Secretary reading the minutes
Seated Mr.Guy de silva, Mr.Sukumaran, Mr.Abeysirigunawardana
and Mr.Sivaratnam.



Mr. Abeysirigunawardana - President addressing. Seated Mr. Guy de Silva,
Mr. Sukumaran



Section of the participants at the A.G.M